2023 யூலை

# இலங்கையில் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

இலங்கை மத்திய வங்கி

விசாரணைகளுக்கும் கருத்துக்களுக்கும் பின்னூட்டல்களுக்கும் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்

உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
மின்னஞ்சல்: ddod@cbsl.lk
தொலைபேசி: 011 2477189

ஐஎஸ்பீஎன் 978-624-5917-16-7
இரண்டாம் பதிப்பு: 2023 யூலை

வெளியீடு : இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01

# பொருளடக்கம்


முன்னுரை ....................................................................................................4

**பாகம் I: நாணயக் கொள்கை வகுத்தல் .........................................................7**

மத்திய வங்கிக் குறிக்கோள்கள் மற்றும் நாணயக் கொள்கை ...................................7

இலங்கையில் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு ....................................................8

நாணயக் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறை ...............................10

**பாகம் II: நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் .......................................11**

நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் பற்றி அறிந்துகொள்ளல் ....................11

நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தலில் திரவத்தன்மை முகாமைத்துவம்........11

மத்திய வங்கியின் திரவத்தன்மை..........................................................12

முக்கிய நாணயக் கொள்கைச் சாதனங்கள்..........................................................16

கொள்கை வட்டி வீதங்களும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளும்...........................16

துணைநில் வசதி......................................................................................20

நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள்..................................................................20

ஏனைய கொள்கைச் சாதனங்கள்......................................................................21

**பாகம் III: நாணயக் கொள்கை ஊடுகடத்தல் பொறிமுறை.......................................23**

# முன்னுரை

பொருளாதார நலனோம்புகையினை மேம்படுத்துவதிலும் அதனூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் அரசாங்கமும் நாணய மேலாண்மைச் சபையும் இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றுகின்றன. அவ்வாறு செய்வதில், அரசாங்கம் மற்றும் நாணய மேலாண்மைச் சபை இரண்டும், பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளையே சார்ந்திருக்கின்றன. பொருளாதாரமானது பணவீக்கமற்ற, உறுதியான மற்றும் நிலைபேறான வளர்ச்சியினை அடைந்துகொள்கின்றது என்பதனை உறுதிசெய்யும். இதனூடாக சமூகத்தின் நலனோம்புகை மேம்படுத்துவதும் பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளின் குறிக்கோள்களாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தி, தொழில் மற்றும் பொது விலை மட்டம் போன்ற பேரண்டப் பொருளாதார மாறிலிகளில் தளம்பல்களைக் குறைப்பதற்கு ஏனையவற்றுக்கு மத்தியில் பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக இது, அடைந்துகொள்ளப்படுகின்றது. இக்குறிக்கோள்களை அடைவதற்கு ஈடுபடுத்தப்படும் கொள்கைகள் பொதுவாக இரு கூறுகளைக் கொண்டவை. அதாவது, நாணயக் கொள்கை மற்றும் இறைக் கொள்கை என்பனவாகும்.

நாணயக் கொள்கையானது பொருளாதாரத்தின் விலை உறுதிப்பாட்டினை அதாவது குறைவான மற்றும் உறுதியான விலை மட்டத்தினை உறுதிசெய்யும் நோக்குடன் வட்டி வீதங்களின் மீதும் பண நிரம்பல் மீதும் கவனம் செலுத்துகின்றது. அரசாங்கத்தின் இறைக் கொள்கையானது பொருளாதார நிலைமைகளுக்குச் செல்வாக்குச் செலுத்தும் பொருட்டு பிரதானமாக வரி விதிப்புடனும் அரசாங்கச் செலவிடல்களுடனும் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. இறைக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக இறைச் சாதனங்களை நிதி அமைச்சு ஈடுபடுத்துகின்ற அதேவேளை, நாணய மேலாண்மைச் சபை நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக நாணயச் சாதனங்களைப் பயன்படுத்துகின்றது. நாணய மற்றும் இறைக் கொள்கை இரண்டும் குடிமக்களின் நன்மைக்காக பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்கும் தூண்டுவதற்கும் பேரண்டப் பொருளாதாரத்தில் காணப்படுகின்ற ஏதுக்களாகும். எனவே, பேரண்டப் பொருளாதாரத்தின் சிறந்த வெளிவரு விளைவுகளை உறுதிசெய்வதற்கு இக்கொள்கைகள் இரண்டிற்கும் இடையிலான முறையான ஒருங்கிணைத்தல் மிகவும் முக்கியத்துவமிக்கதாகும்.

நாணய மேலாண்மைச் சபைக்கு பொறுப்பளிக்கப்பட்ட கடமைப்பொறுப்பினை மேற்கொள்கின்ற மத்திய வங்கியானது முக்கிய நாணய மற்றும் நிதியியல் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துகின்ற ஒரு நாட்டின் உச்சமட்ட நிதியியல் நிறுவனமாகக் காணப்படுகின்றது. அதன் தொழிற்பாடுகள், ஏனையவற்றிற்கு மத்தியில் நாணய வழங்கல், நாணயக் கொள்கையினை நடாத்துதல், கொடுப்பனவு முறைமையினை ஒழுங்குபடுத்தி ஏற்பாடுசெய்தல், இறுதிக் கடன் ஈவோனாகச் செயற்படுதல் மற்றும் நிதியியல் துறை மேற்பார்வையினை நடாத்துதல் என்பவற்றினை உள்ளடக்குகின்றது. பொதுவாக ஒரு நாட்டின் மத்திய வங்கி சுயாதீன நிறுவனமொன்றாக தாபிக்கப்பட்டுள்ளது. பணம், வங்கித் தொழில் மற்றும் பொதுவாக நிதியியல் துறை மீதான பல்வேறு நியதிச் சட்டங்களை நிருவகிப்பதற்கு இது பொறுப்புடையதாக விளங்குகின்றது.

இலங்கையில், இலங்கை மத்திய வங்கிக்கு (இதனகத்துப் பின்னர் மத்திய வங்கியென குறிப்பீடுசெய்யப்படும்) நாட்டின் நாணய மேலாண்மைச் சபையாக இம்முக்கிய வகிபாகத்தினை மேற்கொள்வதற்கு பொறுப்பாணை வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய, மத்திய வங்கியானது வேறு முக்கிய கடமைகளுக்கு மத்தியில் நாணயக் கொள்கையினை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்கு முதன்மைப் பொறுப்புடையதாகும். நாணயக் கொள்கையானது பொருளாதாரத்தில் செலவு மற்றும் பணம் கிடைக்கும் தன்மைக்குச் செல்வாக்குச் செலுத்துவதற்கு மத்திய வங்கியினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை ஈடுபடுத்துகின்றது. விலை உறுதிப்பாட்டை (குறைந்த மற்றும் நிலையான பணவீக்கம்) அடைந்து வியாபார சுழற்சிகளைக் குறைக்கின்றதென பொதுவாகக் குறிப்பிடப்படுகின்ற பொருளாதார தளம்பல்களைக் குறைப்பதையும் மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படுகின்ற நாணயக் கொள்கை நடவடிக்கைகள் இலக்காகக் கொண்டுள்ளன. பண நிரம்பல் மற்றும் கொடுகடன் என்பவற்றில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலமும் பொருளாதாரத்தில் வட்டி வீதங்களை மாற்றியமைப்பதன் மூலமும் மத்திய வங்கி நாணயத் தொழிற்பாடுகளை பயன்படுத்துகின்றது. பொதுவிலை மட்டம், தொழில், வெளியீடு மற்றும் பொதுவாக பொருளாதாரத்தின் நலனோம்புகை என்பவற்றிலும் இந்நடவடிக்கைகள் தாக்கம்செலுத்துகின்றன. வட்டி வீதங்களும் பணநிரம்பலும் கடன் பெறுநர்களினதும் கடன் வழங்குநர்களினதும் போக்கில் தாக்கம்செலுத்துகின்றமையால், அவற்றுக்கான சரிப்படுத்தல் முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுகின்றது. எனவே, நாணயக் கொள்கைச் செயன்முறையின் அத்தகைய விளைவுகள், குறைவான மற்றும் உறுதியான விலை மட்டத்தினை உறுதிசெய்து இதனூடாக பணவீக்கத்தினை தாழ்வானதும் நிலையானதுமான மட்டத்தில் பேணுகின்றன.

நாணயக் கொள்கையானது கூட்டுக் கேள்வியையும் நிரம்பலையும் முகாமை செய்து அதன்பின்னர் பொருளாதார உறுதிப்பாட்டிற்கான கருவியாக மாத்திரம் இருக்காது. அரசாங்கத்தின் இறைக் கொள்கை அதாவது வரிச்செலுத்துதல் மற்றும் அரசாங்க செலவினத்தை முகாமை செய்தல் போன்றன ஒட்டுமொத்த பொருளாதார உறுதிப்பாட்டையும்

வளர்ச்சியையும் உறுதிப்படுத்தவும் முடியும். எனினும், பொதுவாக, வரிகளையும் செலவின மாற்றங்களையும் சட்டமாக்குவதற்கு காலமெடுக்கின்றது. மேலும், பொருளாதார முகவர்கள் இறைக் கொள்கை மாற்றங்களுக்கு பதிலிறுத்தி சீராக்குவதற்கு காலமெடுக்கலாம். எனவே, நாணயக் கொள்கையானது குறிப்பாக பொருளாதாரத்தின் விலை மட்டங்களை உறுதிப்படுத்துகின்ற மிகவும் விரைவானதும் காத்திரமானதுமான வழியாகக் கருதப்படுகின்றது.

விலை உறுதிப்பாட்டின் இக்குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கு நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் மத்திய வங்கியானது பல வகையான சாதனங்களை பயன்படுத்துகின்றது. நவீன காலப் பின்னணியில், ஏனைய பல சாதனங்களுக்கிடையில் மிகவும் முக்கிய நாணயக் கொள்கை சாதனங்களாக கொள்கை வட்டிவீதம் விளங்குகின்றது. கொள்கை வட்டி வீதங்களுக்கும் ஏனைய கொள்கை சாதனங்களுக்கும் மேற்கொள்ளப்படுகின்ற எவையேனும் மாற்றங்கள், பண மற்றும் மூலதனச் சந்தை வட்டி வீதங்களைப் பாதிப்பதாகக் கொள்ளப்படுவதுடன் இதன் பிரதிபலனாக தமது வாடிக்கையாளர்களுடன் நிதியியல் நிறுவனங்கள் கையாளுகின்ற வட்டி வீதங்களையும் பாதிக்கின்றது. அத்தகைய சில்லறை வட்டி வீதங்களூடாக வாடிக்கையாளர் செலவிடுதல் மீதும் வியாபார முதலீடுகள் மீதும் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த கேள்வி மீதும் நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் செல்வாக்குச்செலுத்துகின்றன.

பொருளாதாரத்தின் விலை உறுதிப்பாட்டு குறியீட்டினை அடைந்துகொள்ளும் பாகமொன்றாக, மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் வெளிப்படைத்தன்மையினை மேம்படுத்தும் பொருட்டு சந்தைப் பங்கேற்பாளர்களுடனும் பொதுமக்களுடனும் தொடர்ச்சியாக தொடர்புகொள்வதற்கு மத்திய வங்கி முனைகின்றது. அதற்கமைய, மத்திய வங்கியானது அதன் நடப்பு மற்றும் எதிர்கால நாணயக் கொள்கைப் பணிப்புரை, பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் தோற்றப்பாடு அத்துடன் எதிர்கால நாணயக் கொள்கைத் தீர்மானங்களுக்காக நிகழக்கூடிய பாதை என்பன மீதான தகவல்களைப் பரப்புகின்றது. நாணயக் கொள்கையினை செயல்திறன்வாய்ந்த விதத்தில் நடாத்துவதற்கும் பொதுமக்களின் எதிர்பார்க்கைகளை முகாமைசெய்வதற்கும் அத்தகைய தகவல்கள் மிகவும் முக்கியமானவையாகும்.

இலங்கையில் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில் மத்திய வங்கியின் வகிபாகம் பற்றி பொதுமக்கள் விழிப்புணர்வையும் பொதுமக்களின் புரிந்துகொள்ளலையும் அதிகரிப்பதனை இச்சிற்றேடு நோக்காகக் கொள்கின்றது. நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்துவதில் பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் கொள்கைகள் பற்றிய தெளிவான புரிந்துணர்வைக் கொண்டிருத்தல், நிதியியல் சந்தைகளின் ஆர்வலர்களும் பொதுமக்களும் நாணயக் கொள்கைத் தீர்மானம் மற்றும் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பெறுபேறுகளுக்கிசைவாக அவர்களது நடவடிக்கைகளை சிறந்த முறையில் அணிசேர்ப்பதற்கு துணையளிக்கும்.

இச்சிற்றேடு மூன்று பாகங்களைக் கொண்டது. பாகம் I, நாணயக் கொள்கைக் குறிக்கோள்கள், கட்டமைப்புக்கள், மற்றும் தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறைகள் உள்ளடங்கலாக நாணயக் கொள்கை பற்றிய பின்னணிக் கலந்துரையாடலொன்றை வழங்குகின்றது. சிற்றேட்டின் பாகம் II, இலங்கையினைப் பின்னணியாகக்கொண்டு சந்தைத் திரவத்தன்மை முகாமைத்துவம், நாணயக் கொள்கை சாதனங்கள் என்பன உள்ளடங்கலாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலைக் கலந்தாராய்கின்றது. பாகம் III, நாணய ஊடுகடத்தல் பொறிமுறை பற்றி கலந்துரையாடுகின்றது.

**வரைபடம் 1: மத்திய வங்கியின் பொறுப்பாணையும் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலும்**



**வரைபடம் 2: இலங்கையில் நாணயக் கொள்கை வகுத்தலும் நடைமுறைப்படுத்தலும்: ஒரே பார்வையில்**





பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணும் குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு மத்திய வங்கி நாணயக் கொள்கையினை நடாத்துகின்றது. (குறைந்த மற்றும் நிலையான பணவீக்கம்)





நுகர்வோர் விலை பணவீக்கத்தை (கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில் அமைந்த) நடுத்தரக் காலத்தில் 4-6 சதவீதத்திற்கு இடையில் பேணுவதற்கு நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடலை மத்திய வங்கி பின்பற்றுகின்றது.



மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகள், கூட்டுக் கேள்வியினை தூண்டுகின்றன அல்லது குறைக்கின்றன மற்றும் குறுகிய கால வட்டி வீதங்களை சரிப்படுத்துவதற்கு உதவுகின்றது. நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடலின் தொழிற்பாட்டு இலக்கு சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமாக செயலாற்றுகின்றது.




மத்திய வங்கியானது நாணயக் கொள்கை நிலையினை சமிக்ஞைப்படுத்துவதற்கு வேறு கொள்கை சாதனங்களுடன் சேர்த்து கொள்கை வட்டி வீதங்களை அதாவது துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வீதம் ஆகியவற்றைப் பிரயோகிக்கின்றது.




திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைப் பயன்படுத்தி உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மையினை முகாமைசெய்வதன் மூலம் துணைநில் வீத வீச்சினுள் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தினைப் பேணுவதற்கு மத்திய வங்கி முனைகின்றது.



நிதியியல் நிறுவனங்களின் கடன் வழங்கல் மற்றும் வைப்பு வீதங்கள் உள்ளடங்கலாக பொருளாதாரத்தின் ஏனைய குறுகிய கால மற்றும் நீண்ட கால வட்டி வீதங்களில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் செல்வாக்குச்செலுத்துகின்றது.



வட்டி வீதங்களில் ஏற்படும் குறைத்தல் நுகர்வோர் செலவிடுதலையும் வியாபார முதலீட்டினையும் தூண்டுவதுடன் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்றது. வட்டி வீதங்களின் அதிகரிப்பு, வாடிக்கையாளர் செலவிடுதலையும் வியாபார முதலீட்டினையும் குறைப்பதுடன் இதன் மூலம் பொருளாதார வளர்ச்சியினை மெதுவடையச் செய்து பணவீக்கம் குறைவடைவதற்கு வழிவகுக்கின்றது.



நாணயக் கொள்கை நிலை பற்றி மத்திய வங்கியின் நாணயச் சபை மீளாய்வுசெய்து தீர்மானங்களை மேற்கொள்வதுடன் அவற்றை பொதுமக்களுக்கு அறிவிக்கின்றது.

# பாகம் I: நாணயக் கொள்கை வகுத்தல்

## மத்திய வங்கிக் குறிக்கோள்கள் மற்றும் நாணயக் கொள்கை

மத்திய வங்கியானது இரண்டு மையக் குறிக்கோள்களை அதாவது பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடுகளை பேணுவதனையும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுவதனையும் அடைந்து கொள்வதற்கு முனைகின்றது. விலை உறுதிப்பாடானது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதனூடாக பொருளாதாரத்தின் பொது விலை மட்டத்தில் காணப்படுகின்ற பரந்த தளம்பல்கள் காணப்படவில்லை என்பதனை உறுதிசெய்து இறுதியாக பணத்தின் பெறுமதியினைப் பாதுகாக்கின்றது. முக்கிய விலைத் தளம்பல்கள் காணப்படாத போது பொருளாதார முகவர்கள் தமது நுகர்வு மற்றும் முதலீடு பற்றிய நிச்சயத் தன்மையுடன் உறுதியான தீர்மானங்களை மேற்கொள்ள முடியும். இதனூடாக வரையறுக்கப்பட்ட மூல வளங்களின் வினைத்திறன் வாய்ந்த ஒதுக்கீடு இயலச்செய்கின்றது. மத்திய வங்கியின் இப்பொறுப்பாணை நிலையான பொருளாதார நடவடிக்கை, தொழில் மற்றும் பொதுவாக சமூகத்தின் நலனோம்புகை என்பவற்றுக்கு நன்மை பயக்கின்ற பொருளாதாரத்தினையும் வியாபாரச் சூழலினையும் தோற்றுவிப்பதற்கு அத்தியாவசியமான நிபந்தனையாகக் காணப்படுகின்றது.




நிதியியல் முறைமை உறுதிப்பாடென்பது உள்ளக மற்றும் வெளிவாரி அதிர்வுகள் இரண்டிற்கும் எதிர்த்து நிற்பதற்கான நிதியியல் முறைமையின் இயலுமையினைக் குறிப்பீடு செய்கின்றது. உறுதியான நிதியியல் முறைமையொன்று சேமிப்புக்களைத் திரட்டுவதற்கும் அவற்றை உற்பத்தித்திறன் வாய்ந்த முதலீட்டிற்கு ஒதுக்கீடு செய்வதற்கும் ஆதரவளிப்பதுடன் இடர்நேர்வுகளை முகாமைசெய்து சவால்மிக்க பொருளாதார நிலையிலும் கூட கொடுப்பனவுகளையும் தீர்ப்பனவுகளையும் வசதிப்படுத்துகின்றது. இதனால் நிதியியல் முறைமை உறுதிப்பாடானது சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு சாதகமான பொருளாதார மற்றும் நிதியியல் சூழலினை உறுதிசெய்து அதிக முதலீட்டுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் மக்கள் நலனோம்புகைக்கும் வழிவகுக்கின்றது. விலை உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகள் நிதியியல் முறைமையினூடாக பொருளாதாரத்திற்கு ஊடுகடத்தப்படுவதனால் இவ்விரு குறிக்கோள்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.

மத்திய வங்கியானது பொருளாதாரத்தில் விலை உறுதிப்பாட்டை எய்துவதற்கு நாணயக் கொள்கையை நடாத்துகிறது. நாணயக் கொள்கையானது விலை உறுதிப்பாட்டினை எய்தும் நோக்குடன் பொருளாதாரத்தில் செலவு மற்றும் பணம்/ கொடுகடன் கிடைக்கப்பெறும் தன்மைக்கு செல்வாக்குச் செலுத்துவதற்காக மத்திய வங்கியொன்றினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளை ஈடுபடுத்துகின்றது. பணச் செலவினைக் (வட்டி வீதம்) மற்றும் பணத்தொகை (நாணயம் மற்றும் வைப்புக்கள்) கட்டுப்படுத்தல் அல்லது கொடுகடன் தொகை (வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள் மூலமான கடன் வழங்கல்) கட்டுப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தின் நடவடிக்கை அளவில் மத்திய வங்கி செல்வாக்குச் செலுத்தக்கூடியதாகவுள்ளது. அவ்வாறு செய்வதன் மூலம் பொருளாதாரத்தின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவிடல் மட்டத்தில் மத்திய வங்கி செல்வாக்குச் செலுத்தக் கூடியதாகவிருப்பதுடன் இதனூடாக பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்க வீதத்தில் தாக்கம் செலுத்துகின்றது.

மத்திய வங்கியின் தொழிற்பாட்டைத் தாபித்து நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புடைய ஆளுகைச் சட்டத்தின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் இலங்கையில் பெயரளவு நாணயக் கொள்கையினை நடாத்துவதற்கு மத்திய வங்கி பொறுப்பாகவுள்ளது. அதற்கமைய, மத்திய வங்கியானது பொருளாதாரத்தையும் விலை உறுதிப்பாட்டினையும் அடைந்துகொள்ளும்


நோக்குடன் நாணயக் கொள்கைத் தீர்மானங்களைப் பின்பற்றுகின்றது. இக்குறிக்கோளினை அடைந்துகொள்வதற்கு மத்திய வங்கியானது நடுத்தரகாலத்தின் மீது 4-6 சதவீதம் கொண்ட வீச்சினுள் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணின் (கொ.நு.வி.சு, 2013=100) ஆண்டிற்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறு பணவீக்கத்தைப் பேணுவதை நோக்காகக் கொள்கின்றது. பல்வேறு அதிர்வுகள் காரணமாக தற்காலிகமாக இலக்கிலிருந்து விலகியிருக்கலாம் இருப்பினும், பொருத்தமான நாணயக் கொள்கை நடவடிக்கைகளினூடாக நடுத்தர காலப்பகுதிக்கு மேலாக விலை உறுதிப்பாட்டைப் பேணுவதை மத்திய வங்கி இலக்காகக் கொண்டுள்ளது.

# இலங்கையில் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு

இலங்கையின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பானது கணிசமான காலத்திற்கு முன் பரிணமித்துள்ளது. 1950இல் மத்திய வங்கி தாபிக்கப்பட்டதிலிருந்தும் 1977இல் பொருளாதாரத் தாராளமயமாக்கத்தின் அறிமுகம் வரையிலும் இலங்கையின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பானது பன்னாட்டு நாணயமொன்றுக்கு இலங்கை ரூபாயின் பெறுமதியினைப் பொருத்துவதற்காக செலாவணி வீதக் கரிசனைகளை முதன்மை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந்நிலையான செலாவணிக் கட்டமைப்பின் கீழ், உள்நாட்டு நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்தல் கட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் வெளிநாட்டுப் பணவீக்கம் உள்நாட்டுப் பணவீக்கத்தினைப் பாதித்தது.

1977 இலிருந்து திறந்த பொருளாதாரக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர், மத்திய வங்கியானது பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு படிப்படியாக பெயரளவிலான நிலைநிறுத்தலினைப் பின்பற்றி நேரடிக் கட்டுப்பாடுகளிலிருந்து சந்தை அடிப்படையிலமைந்த நாணயக் கொள்கைக் கருவிகளை நோக்கி நகர்ந்தது. சந்தை அடிப்படையிலான நாணய கொள்கைக் கருவிகளின் அறிமுகம், நேரடி வட்டி வீதங்கள், செலாவணி வீதங்கள், அல்லது கொடுகடன் கட்டுப்பாடுகள் ஆகியவற்றால் ஒடுக்கப்பட்டிருந்த சேமிப்புத் திரட்டலை வலுப்படுத்தி வள ஒதுக்கீட்டின் வினைத்திறனை மேம்படுத்துதலையும் இலக்காகக் கொண்டுள்ளது. நாணய கொள்கைக்கான பெயரளவிலான நிலைநிறுத்தல் மத்திய வங்கியின் நடவடிக்கைகளை முகாமைசெய்து பொருளாதார முகவர்களின் பெயரளவு விலை மட்டம் மற்றும் அதன் பாதை அல்லது விரும்பிய பாதையை அடைவதற்கு நாணய அதிகாரம் என்ன செய்யும் என்பதைப் பற்றிய எதிர்பார்ப்புகளைக் குறைக்கவும் பயன்படுத்தும் மாறியைக் குறிக்கின்றது. பொதுவாக, அதாவது அளவு அடிப்படையிலான பெயரளவு நிலைநிறுத்தல்கள் மற்றும் விலை அடிப்படையிலான பெயரளவு நிலைநிறுத்தல்கள் இரு வகையான பெயரளவிலான நிலைநிறுத்தல்கள் மத்திய வங்கியினால் பயன்படுத்தப்படுகின்றன. அளவு அடிப்படையிலான பெயரளவு நிலைநிறுத்தல் பணத்தை இலக்குவைக்கும் அதேவேளை, விலை அடிப்படையிலான பெயரளவு நிலைநிறுத்தல் வட்டி வீதங்களை அல்லது செலாவணி வீதங்களை இலக்கு வைக்கின்றன.

**வரைபடம் 3: இலங்கையில் நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் பரிணாமம்**



1980களின் ஆரம்ப காலப்பகுதியில் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நாணய இலக்கிடலைப் பின்பற்றியதுடன் இலங்கையில் நாணயக் கொள்கையை நிலைநிறுத்தவதில் முக்கிய பெயரளவாக நாணயக் கூட்டுக்கள் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக, இங்கு நாணயக் கொள்கையினை நடாத்துவதில் நேரடி கட்டுப்பாடுகளின் கீழுள்ள ஒதுக்குப் பணம் தொழிற்பாட்டு இலக்காகப் பயன்படுத்தப்பட்டதுடன் (மத்திய வங்கியுடன் சுற்றோட்டத்திலுள்ள வங்கி வைப்புக்களிலுள்ள நாணயத்தை உள்ளடக்கியது) விரிந்த பணம் பணவீக்க பெறுபேறுகளை அடைவதற்கு இடைநிலை இலக்காகப் பயன்படுத்தப்பட்டது.

இந்நாணய இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் பண நிரம்பலில் ஏதேனும் மாற்றங்கள் விலை உறுதிப்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்ற முக்கிய காரணியாக அமைந்திருந்தது. இதனால் நாணயத் தொழிற்பாடுகள் நாட்டின் பண நிரம்பலினைக் கட்டுப்படுத்துவதுடன் பரந்தளவில் அணிசேர்ந்திருந்தன. எவ்வாறாயினும், பண நிரம்பல் மற்றும் பணவீக்கம் என்பவற்றிற் கிடையிலான பலவீனமடைகின்ற தொடர்பின் முக்கிய காரணமாக பெயரளவு நிலைநிறுத்தலாக நாணய இலக்கிடல்களின் வகிபாகம் நிச்சயமற்றதாக மாறியதுடன் மத்திய வங்கியின் தொடர்பூட்டல் மூலோபாயமும் சிக்கலடைந்தது. இதன்விளைவாக, மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை கட்டமைப்பை தரமுயர்த்துவதற்குக் கட்டாயப்படுத்தியது.

இதற்கமைய, 2000 ஆண்டுகளில் ஆரம்பத்திலிருந்து மத்திய வங்கியானது நாணயக் கொள்கைக் கட்டமைப்புக்கு பல திருத்தங்களை அறிமுகப்படுத்தி வந்தது. 2015இலிருந்து மத்திய வங்கி, பண நிரம்பல் மற்றும் பணவீக்கம் என்பவற்றிற்கிடையிலான பலவீனமடைகின்ற தொடர்பின் முக்கிய காரணமாக நாணய இலக்கிடல் மற்றும் நெகிழ்வுமிக்க நாணய இலக்கிடல் இரண்டினதும் அம்சங்களுடன் மேம்படுத்தப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்புடன் நாணயக் கொள்கையினை நடாத்தியது. அத்தகைய நாணயக் கொள்கைக் கட்டமைப்பு நாணயக் கொள்கை பற்றிய எதிர்பார்க்கை முகாமைத்துவம், வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை மேலும் மேம்படுத்தவதற்கு உதவியது. நெகிழ்வுமிக்க பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பில் மத்திய வங்கியானது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையில் அமைந்த முதன்மைப் பணவீக்கத்தினால் அளவிடப்பட்ட நடுத்தர காலத்தின் மீது 4-6 சதவீதம் கொண்ட பணவீக்க இலக்கிடலொன்றினை அடைகின்ற அதேவேளை, நிலைபேறான பொருளாதார வளர்ச்சியினை அடைந்து கொள்வதற்கு ஆதரவளிப்பதற்கான நாணயக் கொள்கைக் கருவிகளைச் சரிப்படுத்துகின்றது.


தொழிற்படுத்தல் இலக்கென்பது மத்திய வங்கி அதன் நாளாந்த தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் வழிகாட்டுவதற்குப் பயன்படுத்துவதற்கும் போதுமானதாக இருக்கக்கூடிய மாறிலியென்பதுடன் நாணயக் கொள்கைக் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கு அது செயல்திறன்வாய்ந்த விதத்தில் ஆதரவளிக்கக்கூடியது. அதற்கமைய, தற்போது வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையில் முதன்மைக் குறிகாட்டியாகக் காணப்படுகின்ற சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு இலக்காக பயன்படுத்தப்படுகின்றது.

## நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறை

நாணயக் கொள்கை மீதான தீர்மானங்களை மேற்கொள்கின்ற பொறுப்பு மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது. நாணயச் சபையானது வழமையாக ஒரு ஆண்டில் எட்டு தடவைகள் நாணயக் கொள்கை நிலைப்பாட்டை மீளாய்வு செய்கின்றது. எட்டுக் கூட்டங்களின் திகதிகள் ஆண்டின் தொடக்கத்திலேயே வெளியிடப்படுகின்றது. நாணயச் சபையின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் குழு, விலை உறுதிப்பாட்டிற்குப் பொறுப்பாகவுள்ள துணை ஆளுநரின் தலைமையில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய பேரண்டப் பொருளாதார மற்றும் நிதியியல் சந்தைகளில் காணப்படுகின்ற அபிவிருத்திகளுடன் இணைத்து பொருளாதாரத்தின் தோற்றப்பாடு பற்றிய அனைத்தையும் உள்ளடக்கிய பகுப்பாய்வு ஒன்று வழங்குகின்றது. மேலும், நாணயக் கொள்கைக் குழுவானது தொழில்நுட்பப் பகுப்பாய்வு மற்றும் எதிர்வுகூறல்கள் என்பவற்றின் அடிப்படையில் நாணயச் சபைக்கு பரிந்துரைகளை வழங்குகின்றது.

நடப்பு, எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார நிலைமைகள் என்பவற்றிற்குச் சிறந்த முறையில் பொருந்துகின்ற பொருத்தமான நாணயக் கொள்கைத் தீர்மானங்களை நாணயச் சபை பின்பற்றுகின்றது. எடுத்துக்காட்டாக, பொருளாதாரமானது தளம்பல் மிக்கதாக காணப்படுகின்றதென நடுத்தர கால எறிவுகள் பரிந்துரைக்குமாயின் கூட்டுக் கேள்வி அழுத்தங்களை நிலைநிறுத்தி உயர்வான பணவீக்கத்துடன் இணைந்த இடர்நேர்வுகளைக் குறைக்கும் பொருட்டு நாணயச் சபை கொள்கை வட்டி வீதங்களை அதிகரித்து ஒப்பந்த நாணயக் கொள்கை நிலையினை (நாணய இறுக்கமடையச் செய்தல்) பின்பற்றுகின்றது. பொதுவாக மத்திய வங்கியானது உயர்வான பணவீக்கத்தைக் கொண்ட அல்லது உயர்வாக எதிர்பார்க்கப்படும் பணவீக்க நேரங்களின் போது கொள்கை வீதங்களை உயர்வாக அமைத்து திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் அரசாங்கப் பிணையங்களில் விற்பனையூடாக திரவத்தன்மையினை ஈர்த்து அத்துடன்/ அல்லது நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை அதிகரித்து இறுக்கமான நாணயக் கொள்கை நிலையினைப் பின்பற்றுகின்றது. மறுகரத்தில், நடுத்தர கால எறிவுகள் வேகம் குறைந்த வளர்ச்சியினையும் குறைவான பணவீக்க அழுத்தங்களை அல்லது பொருளாதார சரிவினை அல்லது மந்த நிலையினைப் பரிந்துரைக்கின்ற போது நாணயச் சபை, பொருளாதாரத்தினைத் தூண்டுவதற்காக விரிவுபடுத்தும் நாணயக் கொள்கையினை (நாணயத் தளர்வு) பின்பற்றும். விரிவுபடுத்தும் கொள்கையென்பது கொள்கை வட்டி வீதங்களை குறைத்தல் மற்றும் திறந்த சந்தைக் கொள்வனவுகள் அத்துடன்/ அல்லது நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை குறைத்தல் என்பனவூடாக பொருளாதாரத்திற்கு திரவத்தன்மையை உட்செலுத்தல் என்பன மூலம் வாடிக்கையாளர் செலவிடுதலைத் தூண்டுவதற்கும் முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் முனைவதாகும். நாணயச் சபையினால் எடுக்கப்படும் அத்தகைய கொள்கைத் தீர்மானங்கள் அதன் பின்னர் மத்திய வங்கியினால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

வரைபடம் 4 : நாணயக் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறை
(ஆர்வலர்களும் தொழிற்பாடுகளும்)




* முன்மொழியப்பட்ட மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ், நாணயக் கொள்கை தீர்மானம் மேற்கொள்ளல் அதிகாரத்தை நாணயக் கொள்கை சபை கொண்டுள்ளது.

# பாகம் II: நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

## நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் பற்றி அறிந்துகொள்ளல்

நாணயக் கொள்கை அறிமுகப்படுத்தல் என்பது மத்திய வங்கியின் நாணயச் சபையினால் எடுக்கப்பட்ட நாணயக் கொள்கைத் தீர்மானங்களை தொழிற்பாட்டிற்கிடுவதற்காக பல்வேறு நாணயக் கொள்கைக் கருவிகளைப் பயன்படுத்துவதாகும். இலங்கையின் பின்னணியை நோக்குகையில், நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலானது நாணயச் சபையின் தீர்மானங்களுக்கிணங்க மத்திய வங்கியின் உரிய திணைக்களங்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. உள்நாட்டுப் பணச் சந்தை மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை என்பவற்றுடன் தொடர்புடைய நாணயக் கொள்கைச் சாதனங்களுடாக அளவு (பண நிரம்பல்), விலை (வட்டி வீதம்) என்பவற்றைச் சரிப்படுத்துவதன் மூலம் நாணயக் கொள்கைத் தீர்மானம் தொழிற்படுத்தப்படுகின்றது. மத்திய வங்கியின் பின்னணியில் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் உள்நாட்டுப் பணச் சந்தையில் நாணயத் தொழிற்பாடுகளைக் கொண்டு நடாத்துகின்ற அதேவேளை, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் தொடர்புபட்ட கொடுக்கல்வாங்கல்கள் பன்னாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மத்திய வங்கியானது உள்நாட்டு சந்தை நிலைமைகள் மீது தாக்கம் செலுத்துவதற்கு பலவகையான நாணயக் கொள்கைச் சாதனங்களை பயன்படுத்துகின்றது. இலங்கையில் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலில் கொள்கை வட்டி வீதங்கள், திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புகள் மீதான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு என்பன முக்கிய நாணயக் கொள்கைச் சாதனங்களாக பயன்படுத்தப்படுகின்றன. இச்சாதனங்களைப் பயன்படுத்தி நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலின் குறிக்கோள் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைக்கு இசைவான மட்டத்தில் குறுகிய கால வட்டி வீதங்களை பேணுவதாகும். உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், தனியான முதன்மை வணிகர்கள் போன்ற பங்கேற்கும் நிறுவனங்களுடாக நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் செயற்படுத்தப்படுகின்றது. இப்பங்கேற்கும் நிறுவனங்கள் நாணயக் கொள்கை நடவடிக்கையின் தாக்கத்தினை பணச் சந்தைக்கும் அதன் பின்னர் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வட்டிவீதக் கட்டமைப்பிற்கும் ஊடுகடத்துகின்றன.

## நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தலில் திரவத்தன்மை முகாமைத்துவம்

திரவத்தன்மை முகாமைத்துவமானது மத்திய வங்கியினால் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலின் மையக் கூறாக காணப்படுகின்றது. இது கட்டமைப்பு, சாதனங்களின் தொகுப்பு மற்றும் குறிப்பாக மத்திய வங்கி ஒதுக்குகளின் அளவை (திரவத்தன்மையை) முகாமைசெய்யும் விதிகள் மற்றும் நடைமுறைகள் என வரையறுக்கப்படுகிறது. அதாவது அவற்றின் விலையை கட்டுப்படுத்தும் பொருட்டு, குறுகிய கால வட்டி வீதங்கள் அதன் இறுதி இலக்கான விலை உறுதிப்பாட்டுடன் இணங்குகின்றன. எனவே, சந்தை வட்டி வீதங்களும் கொடுகடன் உருவாக்கமும் திரவத்தன்மையுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதால், நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் செயன்முறையை வசதிப்படுத்துவதில் திரவத்தன்மை முக்கிய மாறியாக காணப்படுகின்றது.

இதற்கமைவாக, மத்திய வங்கியினால் திரவத்தன்மையை மதிப்பீடு செய்து எதிர்வுகூறுவதற்கான கட்டமைப்பானது நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்துவதின் தொடக்கப் படிமுறையினை மாறாமல் அமைக்கின்றது. நாளாந்த அடிப்படையில் சந்தைப் பங்கேற்பாளர்களுடன் மத்திய வங்கியினால் நடாத்தப்பட வேண்டிய நாணயத் தொழிற்பாடுகளின் வகையை இது நிர்ணயிக்கின்றது. மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கமைவாக, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதத்தை விரும்பத்தக்க மட்டத்திலும் விரும்பத்தக்க பாதையில் வழிநடத்தும் வகையில், நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் கருவிகளும் உபாயங்களும் சந்தையின் திரவத்தன்மை நிலைமைகள் மீதே பெரும்பாலும் சார்ந்திருப்பதனால் பணச் சந்தைத் திரவத்தன்மை பற்றிய முறையான புரிந்துகொள்ளலும் நெருக்கமான கண்காணிப்பும் மிகவும் முக்கியமானதாக விளங்குகின்றன.

# மத்திய வங்கியின் திரவத்தன்மை

பொதுவாக வங்கிகளானது தமது நாளாந்த தீர்ப்பனவுக் கடப்பாடுகளை முகங்கொடுப்பதற்காக பணத்தை மத்திய வங்கிக் கணக்கொன்றில் வைத்திருக்கின்றன. இதற்கு மேலதிகமாக, தமது வாடிக்கையாளர்களுக்கு அனைத்து வைப்புக்களையும் கடன் வழங்குவதிலிருந்து தவிர்க்கும் நோக்குடன் வங்கிகளின் வைப்புப் பொறுப்புக்களின் ஒரு சில பகுதியை மத்திய வங்கிக் கணக்குடன் வைத்திருக்குமாறு மத்திய வங்கி அனைத்து வங்கிகளையும் கோருகின்றது. இதுவே பொதுவாக ஒதுக்குத் தேவைப்பாடு என அறியப்படுகின்றது. தமது நாளாந்தக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு பயன்படுத்துகின்ற இத்தகைய ஒதுக்குகளை வங்கிகள் அதே கணக்கில் வைத்திருக்கின்றன. ஒதுக்குத் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக மத்திய வங்கியில் வங்கிகளால் பேணப்படும் ஒதுக்கு நிலுவைகளானது மத்திய வங்கியின் திரவத்தன்மை முகாமைத்துவத்தின் முக்கிய கூறாக காணப்படுகின்றது.




மத்திய வங்கி திரவத்தன்மை எண்ணக்கருவானது சந்தை திரவத்தன்மை எண்ணக்கருவிலிருந்து மாறுபடுகின்றது. இது பொதுவாக சந்தை பங்கேற்பாளர்கள் தமது விலைகளில் பாரிய மாற்றங்களைத் தூண்டாமல் பிணையமளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களைக் கையேற்பதற்கான இயலுமையொன்றின் வழிமுறையொன்றாக காணப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, திரவத்தன்மை எனும் பதமானது அது பயன்படுத்தப்படும் சூழ்நிலைகளைப் பொறுத்து பல்வேறு பொருள்களுடனும் உள்ளார்ந்த அர்த்தங்களுடனும் பயன்படுத்தப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட நாளில் மத்திய வங்கியில் வைத்திருக்கும் ஒதுக்கு நிலுவைகளின் மொத்தம் அதாவது, நிதியியல் நிறுவனங்களின் ஒதுக்கு வைப்புக்கள் (நடைமுறைக் கணக்கிலுள்ள நிலுவைகள், தீர்ப்பனவுக் கணக்கு அல்லது தீர்ப்பனவு நிலுவைகள்) நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தலுக்கு மத்திய வங்கியுடனான திரவத்தன்மையாக கருத்திற்கொள்ளப்படுகின்றது. இலங்கையில் அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் நியதி ஒதுக்கு விகிதத்தை பூர்த்தி செய்வதற்கும் நாளாந்த தீர்ப்பனவுக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும் (தீர்ப்பனவு நிலுவைகள்) பண உருவாக்கத்திற்கான முக்கிய வைப்பு நிறுவனமொன்றாக, ஒதுக்கு நிலுவைகளை மத்திய வங்கியுடன் பேணுகின்றன.

இதற்கமைய, மத்திய வங்கியுடன் தமது ஒதுக்குக் கணக்குகளில் நிதியியல் நிறுவனங்களால் வைத்திருக்கப்படும் இத்தகைய உண்மை நிலுவைகள் மீதே மத்திய வங்கியின் திரவத்தன்மை தங்கியுள்ளது. உதாரணமாக, இலங்கையிலுள்ள அனைத்து உரிமம்பெற்ற நிறுவனங்களும் தமது நியதி ஒதுக்கு வீத கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காகவும் தமது தீர்ப்பனவுத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காகவும் வழங்கப்பட்ட திகதியில் பில்லியனை மத்திய வங்கியிலுள்ள தமது குறித்த ஒதுக்குக் கணக்குகளில் மொத்தமாக ரூ.150 பில்லியனை வைத்திருப்பின், குறிப்பிட்ட நாளின் ஓரிரவு திரவத்தன்மை ரூ.150 பில்லியனாகவிருந்தது.

தனிப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் (பங்கேற்பாளர்கள்) இத்தகைய நிதிகளை கடனைப்பெற்று வங்கிகளுக்கிடையிலான சந்தையில் கடனாக வழங்கலாம். எவ்வாறாயினும், அதன் ஐந்தொகையில் பிரதிபலிக்கப்பட்டவாறு தமது எதிரணியுடனான மத்தியவங்கியின் கொடுக்கல்வாங்கல்களின் காரணமாக மாத்திரம் திரவத்தன்மை நிலைமையை மாற்றமுடியும். இப்பின்னணியில், மத்திய வங்கியின் திரவத்தன்மையை நிர்ணயிக்கின்ற காரணிகள் இரு பிரதான துணைக் குழுக்களிற்குள் வகைப்படுத்தப்படுகின்றன. அதாவது, தன்னிச்சையான காரணிகள் மற்றும் நாணய தொழிற்பாட்டுடன் தொடர்புடைய காரணிகள்.

மத்திய வங்கியின் நேரடியான கட்டுப்பாட்டில் சுயாதீனமாக மாற்றம் காணப்படுகின்ற நிதியியல் நிறுவனங்களின் ஒதுக்குக் கணக்குகள் நீங்கலாக மத்திய வங்கியின் ஐந்தொகையில் காணப்படும் விடயங்களாக திரவத்தன்மையை பாதிக்கும் தன்னிச்சையான காரணிகளை வரைவிலக்கணப்படுத்தலாம். மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்,

**வரைபடம் 5 : திரவத்தன்மையின் மாற்றத்திற்கு பங்களிக்கும் காரணிகள்**

திரவத்தன்மையைக் குறைக்கும் காரணிகள் | திரவத்தன்மையை அதிகரிக்கும் காரணிகள்

### தன்னிச்சையான காரணிகள்

**திரவத்தன்மையைக் குறைக்கும் காரணிகள்**

- மத்திய வங்கி மூலம் உள்நாட்டுச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி விற்பனை
- அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கபட்ட கடன்களின் மீள்கொடுப்பனவுக்காக அரசாங்கத்திற்கு மத்திய வங்கி மூலம் வெளிநாட்டுச் செலாவணி விற்பனை
- மத்திய வங்கியிலிருந்து வங்கிகளால் எடுப்பனவுசெய்யப்பட்ட நாணயம்
- மத்திய வங்கி மூலம் பேணப்படும் திறைசேரி உண்டியல்கள்/ முறிகள் என்பவற்றின் முதிர்வு/ ஓய்வு
- பங்கேற்கும் நிறுவனங்கள் மூலம் மத்திய வங்கியிலிருந்து பெறப்படும் கடன்கள் மற்றும் முற்கொடுப்பனவு என்பவற்றின் மீள்கொடுப்பனவு

**திரவத்தன்மையை அதிகரிக்கும் காரணிகள்**

- மத்திய வங்கி மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவு
- மத்திய வங்கி மூலம் அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன் பெறுகைகள் கொள்வனவு
- வங்கிகள் மூலம் மத்திய வங்கியில் நாணய வைப்பு
- மத்திய வங்கி மூலம் முதனிலைச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்கள்/ முறிகள் என்பவற்றின் கொள்வனவு
- அரசாங்கத்திற்கு மத்திய வங்கியின் இலாபங்கள் விடுவிப்பு
- மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு தற்காலிக முற்பணங்களை வழங்குதல்
- மத்திய வங்கி மூலம் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்

### நாணயத் தொழிற்பாடுகள்

**திரவத்தன்மையைக் குறைக்கும் காரணிகள்**

- மத்திய வங்கி மூலம் இரண்டாந்தரச் சந்தைக்கு திறைசேரி உண்டியல்கள் / முறிகள் என்பவற்றின் விற்பனை (மீள்கொள்வனவு ஏலங்கள்)
- உடனடி அடிப்படையொன்றில் மத்தி-யிய வங்கி மூலம் வைத்திருக்கப்படும் திறைசேரி உண்டியல்கள்/ முறிகள் என்பவற்றின் விற்பனை
- மத்திய வங்கி மூலம் பிணையங்கள் வழங்குகை
- மத்திய வங்கி மூலம் துணைநில் வைப்பு வசதி வழங்குகை

**திரவத்தன்மையை அதிகரிக்கும் காரணிகள்**

- மத்திய வங்கி மூலம் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்கள்/ முறிகள் என்பவற்றை கொள்வனவு செய்தல் (நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்கள்)
- உடனடி அடிப்படையொன்றில் மத்திய வங்கி மூலம் வைத்திருக்கப்படும் திறைசேரி உண்டியல்கள்/ முறிகள் என்பவற்றை கொள்வனவு செய்தல்
- மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட சொந்தப் பிணையங்கள் இளைப்பாறுதல்
- மத்திய வங்கி மூலம் துணைநில் வைப்பு வசதியை வழங்குதல்

சுற்றோட்டத்திலுள்ள நாணயம் மற்றும் மத்திய வங்கியுடன் அரசாங்க நடைமுறைக் கணக்கின் நிலுவைகள் என்பன மிக முக்கியமான தன்னிச்சையான காரணிகளாக காணப்படுகின்றன. இத்தகைய விடயங்களில் ஏற்படும் மாற்றமானது திரவத்தன்மையை வழங்குகின்றது அல்லது மீளப்பெறுகின்றது (அதிகரிக்கின்றது அல்லது குறைக்கின்றது) என்பதுடன் இதனால் மத்திய வங்கியில் வைத்திருக்கப்படும் நிதியியல் நிறுவனங்களின் ஒதுக்கு கணக்குகளை நேரடியாகவோ அல்லது சுயாதீனமாகவோ பாதிக்கின்றது. உதாரணமாக, மத்திய வங்கி மூலம் சந்தையில் வெளிநாட்டு நாணயத்தைக் கொள்வனவுசெய்தல், மத்திய வங்கிக்கு விற்கப்பட்ட அரசாங்கத்தின் வெளிநாட்டு நாணயக் கடன் பெறுகைகள் போன்ற வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள் மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் மாற்றத்திற்கு வழிவகுத்து உரிமம்பெற்ற வாத்தக வங்கிகளின் ஒதுக்கு நிலுவைகளை அதிகரிக்கின்றது என்பதுடன் இதனால் திரவத்தன்மையும் அதிகரிக்கின்றது. மேலும் மத்திய வங்கி மூலமான அரசாங்கத்திற்கான தற்காலிக முற்கொடுப்பனவுகளானது அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியில் பேணப்படும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் ஒதுக்குக் கணக்கிற்கு பணத்தை வைப்புச் செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் அதிகரிப்பை ஏற்படுத்துகின்றது என்பதுடன் இதனால் திரவத்தன்மையில் அதிகரிப்பொன்றையும் ஏற்படுத்துகின்றது. இதனால், நிதியியல் நிறுவனம் மூலம் பேணப்படும் ஏதேனும் ஒதுக்குக் கணக்கில் வரவு அல்லது செலவு வைப்பதன் மூலம் மத்திய வங்கியின் ஐந்தொகையில் மாற்றத்தை ஏற்படுத்தும் ஏதேனும் கொடுக்கல்வாங்கல் மத்திய வங்கி திரவத்தன்மை நிலைக்கான மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும்.

தற்போது நிலவுகின்ற நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்திலும் சுயாதீனக் காரணிகளின் மாற்றங்களின் காரணமாக தயாரிக்கப்பட்ட நாளாந்தத் திரவத்தன்மை எதிர்வுகூறலின் அடிப்படையிலும் நடாத்தப்படுவதற்கு தேவைப்படும் நாணயத் தொழிற்பாடுகளின் அளவையும் தன்மையையும் மத்திய வங்கி தீர்மானிக்கின்றது. இதற்கமைய, ஒதுக்கு மட்டங்களைத் தீர்மானிக்கின்ற இரண்டாம் துணைக்குழுக் காரணிகள் நாணயத் தொழிற்பாடுகளை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை பிரதானமாக உள்ளடக்குகின்றது.

திறந்த சந்தை தொழிற்பாடுகளை நடாத்துவதன் காரணமாக ஏற்படும் திரவத்தன்மையின் தாக்கத்தை பின்வரும் உதாரணத்தை பயன்படுத்தி எடுத்துக்காட்ட முடியும். இரண்டாந்தரச் சந்தைகளிலுள்ள அரச பிணையங்களை மத்திய வங்கி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிலிருந்து கொள்வனவு செய்கின்றது என எண்ணுங்கள். அதன்பின்னர், மத்திய வங்கியிலுள்ள தமது ஒதுக்கு கணக்குகளில் வரவு வைப்பதன் மூலம் அவற்றை மத்தியவங்கி செலுத்த வேண்டியுள்ளதுடன் இதன் விளைவாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தொடர்புடைய ஒதுக்கு கணக்குகளின் நிலுவைகளில் எழுச்சியொன்றை உருவாக்கி அதன்மூலம், திரவத்தன்மை மட்டத்தை அதிகரித்தல். அதேபோன்று, உரிமம்பெற்ற வாத்தக வங்கிகளுக்கு மத்திய வங்கி பிணையங்களை விற்கும் போது, ஒதுக்குக் கணக்குகள் மற்றும் திரவத்தன்மை என்பவற்றின் விளைவாக அமைந்த தாக்கமானது எதிராகக் காணப்படலாம். இதற்கமைய, இணைந்து காணப்படுகின்ற காரணித் தொகுதிகளானது, மத்திய வங்கியுடனான உரிமம்பெற்ற வங்கிகளின் ஒட்டுமொத்த ஒதுக்கு நிலுவையின் மதிப்பீடொன்றை வழங்குகின்றது. (வரைபடம் 5ஐப் பார்க்கவும்)

குறித்தவொரு காலப்பகுதியில் சராசரி அடிப்படையொன்றில் ஒதுக்கு நிலையைப் பேணவேண்டிய தேவை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு உள்ளபோதும், அவற்றின் ஒதுக்குக் கணக்குகளிலுள்ள நிலுவையானது மத்திய வங்கியால் விதிக்கப்படும் ஒதுக்குத் தேவைப்பாடுகளை விட குறைவாக அல்லது உயர்வாக நாளாந்த அடிப்படையொன்றில் இருக்க முடியும். உதாரணமாக, குறித்த நாளொன்றில் நியதிச்சட்ட ஒதுக்கு வீதத்தின் தற்போதைய மட்டத்தை அடிப்படையாகக்கொண்டு, ரூ. 150 பில்லியன் நிலுவையொன்றை ஒட்டுமொத்த உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் பேண வேண்டும் என எண்ணுங்கள், அத்தகைய ஒதுக்கு நிலுவைகள் ரூ. 135 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்திருப்பின், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் சராசரியாக 15 நாள் காலப்பகுதியில் தேவைப்படும் ஒதுக்கு மட்டத்தை நிவர்த்திசெய்தல் வேண்டும். இது, ஒதுக்கு பேணல் காலப்பகுதியாக காணப்படுகின்றது. இதற்கமைய, ஒதுக்கு பேணல் காலப்பகுதியின் இறுதியில், தனிப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கியின் வைப்பு மட்டத்தை அடிப்படையாகக்கொண்டு நிர்ணயிக்கப்படும் ஒதுக்கு காலப்பகுதிக்கான தமது ஒதுக்கு தேவைப்பாடுகளை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நிவர்த்திசெய்யவேண்டியுள்ளன. அதாவது, ஒதுக்கு பேணல் காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கி மூலமான நடைமுறைக் கணக்கு நிலுவைகளின் சராசரியானது ஆகக்குறைந்தது குறைந்தபட்ச ஒதுக்குத் தேவைப்பாடுகளுக்குச் சமமாக காணப்படவேண்டும்.

எவ்வாறாயினும், உண்மையில், எதிர்பாராத அல்லது திட்டமிடப்படாத கொடுக்கல்வாங்கல்களின் காரணமாக வங்கிகளின் ஒருநாளுக்குள்ளேயான திரவத்தன்மையாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் வைத்திருக்கும் மேலதிகமான ஒதுக்குகள் நிச்சயமற்றவையாக காணப்படுகின்றன அல்லது ஒதுக்குகளில் சில பற்றாக்குறை காணப்படுகின்றன. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் வைத்திருக்கப்படும் ஒதுக்கு கணக்குகளிலுள்ள நிலுவை மற்றும் வழங்கப்பட்டநாளில் தமக்கு தேவைப்படும் ஒதுக்குகள் என்பவற்றிற்கிடையிலான வேறுபாடு பற்றாக்குறையான திரவத்தன்மை அல்லது மிகையான திரவத்தன்மை என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. மத்திய வங்கியுடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வைப்பு நிலுவைகள் நியதிச் சட்ட ஒதுக்குத் தேவைப்பாட்டின் கீழ் தமது ஒதுக்கு கணக்கை பேணவேண்டிய தேவையை விட அதிகமாக காணப்படின், வழங்கப்பட்ட நாளொன்றில் வங்கி முறைமை மிகையாக (மிகையான திரவத்தன்மை) கருதப்படும். வழங்கப்பட்ட நாளில் ரூ. 150 பில்லியன் தேவைப்படும் ஒதுக்கு மட்டமாகவும் ரூ. 165 பில்லியன் மத்திய வங்கியுடன் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் உண்மையான நிலுவையாகவும் காணப்படின், தேவைப்படும் திரவத்தன்மையின் ரூ.15 பில்லியன் தொகை மிகையான திரவத்தன்மையாக கருதப்படுகின்றது. இதற்கு மாறாக, மத்திய வங்கியுடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் வைப்பு நிலுவைகள் நியதிச் சட்ட ஒதுக்குத் தேவைப்பாட்டின் கீழ் தமது ஒதுக்கு கணக்கை பேணவேண்டிய தேவையை விட குறைவாக காணப்படின், வழங்கப்பட்ட நாளொன்றில் வங்கி முறைமை பற்றாக்குறையாக (பற்றாக்குறையான திரவத்தன்மை) கருதப்படும்.

மேலதிக ஒதுக்குகள் இலாபம் ஈட்டாத காரணத்தால் வங்கிகளுக்கிடையிலான பணச்சந்தையில் கடன்வழங்குவதன் மூலம் அல்லது துணைநில் வைப்பு வசதிகளின் கீழ் திறந்த சந்தை தொழிற்பாட்டு ஏலங்கள் அல்லது ஓரிரவு அடிப்படை ஆகியவற்றின் கீழ் பல்வேறு காலத்திற்கு மத்திய வங்கியில் வைத்திருப்பதன் மூலம் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தமது மிகையான திரவத்தன்மையை/ ஒதுக்குகளை தனிப்பட்ட ரீதியில் முகாமைசெய்கின்றது. மறுபுறத்தில், வங்கியானது குறுகிய நிலைமையில் காணப்படும் போது, அத்தகைய குறுகிய நிலைமை பொதுவாக வங்கிகளுக்கிடையிலான கடன்பாடுகளூடாக நிதியீட்டம் செய்யப்படுகின்றது. இதற்கமைய, திரவத்தன்மை தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் போது, உரிமம்பெற்ற வங்கிகள் பிணையம் எதுவுமின்றி ஒவ்வொருவரிடையும் கடனைப் பெறுவதற்கும் வழங்குவதற்கும் அனுமதிப்பதன் மூலம் தமது ஓரிரவு திரவத்தன்மை தேவைப்பாடுகளை முகங்கொடுப்பதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் ஓரிரவு அல்லது குறுங்காலச் சந்தையாக காணப்படும் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தையைப் பயன்படுத்தலாம். இத்தகைய கொடுக்கல்வாங்கல்களானது மிகவும் குறுங்காலமாக காணப்படுவதுடன் சந்தையில் கேள்வித் திரவத்தன்மையையும் நிரம்பல் திரவத்தன்மையையும் பிரதிபலிக்கின்றது. எவ்வாறாயினும், ஏதேனும் வங்கி தனது திரவத்தன்மை தேவைப்பாட்டை வங்கிகளுக்கிடையிலான வங்கியூடாக முற்றாக தீர்க்கப்படாவிடின், இலங்கை மத்திய வங்கியிடமிருந்து திறந்த சந்தை தொழிற்பாட்டு ஏலங்களூடாக அல்லது ஓரிரவு துணைநில் வைப்பு வசதியூடாக கடனைப்பெறவேண்டியிருக்கும்.

மத்திய வங்கி மூலம் திரவத்தன்மை மிகை அல்லது திரவத்தன்மை பற்றாக்குறையை முகாமைசெய்கையில், நாணய தொழிற்பாடுகளுக்கான வினைத்திறனான கட்டமைப்பொன்றை கொண்டிருத்தலென்பது மிகமுக்கியமாக காணப்படுகின்றது. இதற்கு சந்தை மற்றும் பொருளாதாரம் என்பவற்றின் வட்டி வீதங்கள் மீதான திரவத்தன்மை அசைவுகளின் தாக்கம் காரணமாகும். உதாரணமாக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடன் மிகையான திரவத்தன்மை காணப்படுகின்ற போது, விரும்பிய மட்டத்திற்கு கீழ் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதத்தில் கீழ்நோக்கிய சாய்வொன்றை தூண்டுகின்ற போக்கு காணக்கூடும். எனவே, மிகையான திரவத்தன்மை சூழ்நிலையில், குறுங்கால வட்டி வீதங்களில் ஏற்பட்ட தேவையற்ற வீழ்ச்சியொன்றைத் தடுப்பதற்காக மிகையானவற்றை ஈர்ப்பதற்கு நாணயத் தொழிற்பாடுகளை மத்திய வங்கி நடாத்தக்கூடும். அதேபோன்று திரவத்தன்மை பற்றாக்குறையொன்று காணப்படும் போது சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தை விரும்பிய மட்டத்திற்கு மேலதிகமாக தள்ளுவதற்கான போக்கொன்று இங்கே காணப்படுகின்றது. எனவே, திரவத்தன்மை பற்றாக்குறைச் சூழ்நிலையை பொறுத்தவரையில் மத்தியவங்கியானது சந்தை தேவைப்பாடுகளை முகங்கொடுப்பதற்காக தனது நாணயத் தொழிற்பாடுகளூடாக திரவத்தன்மையை வழங்கல் செய்யலாம். இதன் மூலம் வட்டிவீதங்கள் மீதான தேவையற்ற அழுத்தங்கள் குறைக்கப்படுகின்றன. எனவே, இலங்கையைப் பொறுத்தவரையில் வட்டி வீதங்களை அதிகரிப்பதற்கு குறிப்பாக, நாணயக் கொள்கையில் தொழிற்பாட்டு இலக்காகக் காணப்படும் சாராசி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதத்தை அதிகரிப்பதற்கு திரவத்தன்மையை ஈர்த்தல் அல்லது உட்செலுத்துதல் என்பன மத்திய வங்கிக்கு மிக முக்கியமாக காணப்படுவதுடன் இதன் மூலம் பரந்தளவிலான பொருளாதாரத்தில் பணம் மற்றும் கொடுகடனின் செலவையும் கிடைப்பனவையும் பாதிக்கின்றது.

திரவத்தன்மை ஏற்பாடானது கட்டாயமாக மத்தியவங்கிக்குள் அனைத்து மைய செயற்பாடுகளுடனும் இணைக்கப்படுகின்றது. இது கொடுப்பனவு முறைமையின் மிதமான தொழிற்பாட்டின் ஊடாக நிதியியல் உறுதிப்பாட்டை பாதுகாப்பதற்கும் அத்துடன் நாணய கொள்கையை ஊடுகடத்துவதற்குமான அத்தியாவசியமான தூண் ஒன்றை உள்ளடக்குகின்றது. பொருளாதாரத்தில் கொடுப்பனவு முறைமையின் மிதமான தொழிற்பாட்டை போதுமான திரவத்தன்மை உறுதிப்படுத்துவதுடன் கொடுப்பனவுக் கடப்பாடுகளை உரியவாறு நிறைவேற்றுவதற்கு போதுமான நிதியங்களையும் உறுதிப்படுத்துகின்றது. வங்கிகளானது ஒருவரின் அல்லது சில நிறுவனங்களின் திரவத்தன்மையைப் பூர்த்தி செய்தாலும் இவை முறைமையின் ஒட்டுமொத்த தேவைப்பாடுகளை நிறைவேற்ற முடியாது. எவ்வாறாயினும் மத்திய வங்கி ஒட்டுமொத்த முறைமையின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான திரவத்தன்மையை வழங்க முடியும் என்பதுடன் நிதியியல் நிறுவனங்களுக்கு கடன்களை வழங்குவதன் மூலம் அல்லது நிதியியல் நிறுவனங்களிடமிருந்து கடன்களைப் பெறுவதன் மூலம் நிதியியல் முறைமையின் திரவத்தன்மை ஒழுங்குமுறைப்படுத்துவதில் முக்கிய வகிபாகம் ஒன்றை வகிக்கின்றது. அவ்வகையில் மத்திய வங்கியினூடாக கூர்மையாக கண்காணிப்பதன் மூலமும் காலமுறையான நடவடிக்கைகள் மூலமும் மேற்கொள்ளப்படும் முறையான திரவத்தன்மை முகாமையானது சந்தையில் திரவத்தன்மையின் தேர்ச்சியான மட்டங்களை உறுதிப்படுத்தும். இது வட்டிவீதங்களை நிலைப்படுத்தல், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமையின் மிதமான தொழிற்பாட்டை உறுதிப்படுத்தல் என்பவற்றிற்கு மிக இன்றியமையாததாக காணப்படுகின்றது. எனவே, திரவத்தன்மை முகாமையானது பணச்சந்தையில் உறுதிப்பாட்டை அடைவதிலும் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த நிதியியல் முறைமையிலும் முக்கிய வகிபாகத்தை வகிக்கின்றது.

# முக்கிய நாணயக் கொள்கைக் சாதனங்கள்

திரவத்தன்மை நிலைமைகள் சந்தை வட்டிவீதங்களை பாதிக்கின்றமையால் விரும்பிய மட்டத்தில் குறுங்கால வட்டிவீதங்களைப் பேணும்பொருட்டு திரவத்தன்மையை முகாமை செய்வதற்காக நாணயக் கொள்கை சாதனங்களின் வரிசையொன்றை மத்திய வங்கி பயன்படுத்துகின்றது. இதன் விளைவாக கொள்கை வட்டிவீதங்கள், திறந்த சந்தை தொழிற்பாடுகள், நியதி ஒதுக்கு வீதம் மற்றும் வங்கி வீதம் என்பன மத்திய வங்கியின் முக்கிய நாணயக் கொள்கைச் சாதனங்களாகக் காணப்படுகின்றன.

**வரைபடம் 6: இலங்கை மத்திய வங்கியின் கொள்கைச் சாதனங்கள்**

**முக்கிய நாணயக் கொள்கை சாதனங்கள்**

- கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் திறந்த சந்தை தொழிற்பாடுகள்
- நியதி ஒதுக்குத் தேவைப்பாடு
- கொடுகடன் மீதான அளவுசார் மட்டுப்படுத்தல்கள்
- வட்டி வீதங்கள் மீதான உச்ச வரம்பு
- காத்திரமான தொடர்பூட்டல் மற்றும் முன்னோக்கிய வழிகாட்டல்
- ஒழுக்க நெறிசார் இணக்கம்

**ஏனைய கொள்கை சாதனங்கள்**


- பேரண்டமுன்மதி வழிமுறைகள்
- வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள்
- மீள் நிதியிடல் வசதிகள்
- வங்கி வீதம்

# கொள்கை வட்டி வீதங்களும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளும்

தற்காலத்தில் மத்திய வங்கியானது அதிகம் சந்தையடிப்படையில் அமைந்த முனைப்புமிக்க திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் முறைமையின் கீழ் நாணயக் கொள்கையினை முக்கியமாக நடைமுறைப்படுத்துகின்றது. வங்கித்தொழில் முறைமையில் திரவத்தன்மை மட்டங்களைப் பேணுதல் மற்றும் பண நிரம்பலிலும் (வங்கித்தொழில் முறைமையிலுள்ள ஒதுக்குகள்) குறுங்கால வட்டி வீதங்களிலும் தாக்கம் செலுத்துதல் என்பன திறந்த சந்தை தொழிற்பாடுகளின் முக்கிய குறிக்கோள்கள் ஆகும். இவை வேறு நீண்டகால வட்டி வீதங்களையும் சொத்து விலைகளையும் ஒட்டுமொத்தமாக பாதிக்கின்றன. வைப்பு மற்றும் கடன் வழங்கல் வீதங்கள் போன்ற வேறு வட்டி வீதங்கள் மீதான தேறிய தாக்கமானது வீட்டலகுகளினதும் தொழில்களினதும் சேமிப்பு மற்றும் செலவிடல் தீர்மானங்கள் மீதும் அத்துடன் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கையிலும், பொருளாதாரத்தின் பொது விலை மட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

திறந்த சந்தைத் தொழிற்பாட்டுக் கட்டமைப்பின் முக்கிய கூறாக கொள்கை வட்டி வீதங்களால் உருவாக்கப்பட்ட வட்டி வீத வீச்சுக் காணப்படுகின்றது. கொள்கை வட்டி வீதங்கள் என்பது அனைத்து ஏனைய வட்டி வீதங்களும் நிர்ணயிக்கப்படுகின்ற பொருளாதாரத்தின் அடிப்படை வட்டி வீதங்களாகும். பொருளாதாரத்திலுள்ள வங்கிகளும் ஏனைய நிதியியல் நிறுவனங்களும் கொள்கை வட்டி வீதத்தினால் வழிநடாத்தப்படுகின்ற கடன் வழங்கலுக்கான மற்றும் வைப்புகளுக்கான அவற்றிற்கே உரிய வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதற்கு சுயாதீனமாக உள்ளன. கொள்கை வட்டி வீதங்கள் நிதியியல் முறைமையிலும் வங்கித்தொழில் முறைமையிலும் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்திலும் முக்கிய பங்காற்றுவதுடன் இலக்கிடப்பட்ட பணவீக்கப் பாதையினை அடைந்துகொள்வதற்கான முக்கிய சாதனமாக விளங்குகின்றது. கொள்ளை வட்டி வீதங்களானது மத்திய வங்கியின் நாணயக் கொள்கை உறுதிப்படுத்துவதற்கானதும் பொருளாதாரத்தின் கொள்கை வட்டி வீதங்களின் உறுதிப்பாட்டை நிலை நிறுத்துவதற்குமான பொறிமுறையொன்றாக காணப்படுகின்றன.

பணச் சந்தையில் ஓரிரவு வட்டி வீதங்களுக்கான உச்ச மற்றும் தாழ்ந்த எல்லைகளாக செயற்படுகின்ற துணைநில் வீத வீச்சினைக் கொள்கை வட்டி வீதங்கள் உருவாக்குகின்றன. வீச்சின் தாழ்ந்த எல்லையான துணைநில் வைப்பு வசதி வீதமும் வீச்சின் உச்ச எல்லையான துணைநில் கடன் வழங்கல் வசதி வீதமும் பொருளாதாரத்தில் குறுகிய கால வட்டி வீதங்களையும் ஏனைய வட்டி வீதங்களையும் நிலைநிறுத்துவதில் முக்கிய ஏதுவாகக் காணப்படுகின்றன. ஏற்படுகின்ற ஒட்டுமொத்த உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கி மூலம் நேரடியாக தாக்கம் செலுத்தப்படும் வட்டி வீதங்கள் குறிப்பாக





குறுங்கால வட்டி வீதங்கள் வட்டிவீதங்களில் நிலையாக காணப்படுவது மிக முக்கியமாகும். மத்திய வங்கியானது வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பண வீதத்தினை (அதாவது சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தினை) கொள்கை வட்டி வீத வீச்சினுள் பேணுவதற்கு முயற்சிக்கின்றது. வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பண வீதம் என்பது வட்டி வீத ஊடுகடத்தலில் முதலாவது சுழற்சியாகும். மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களுக்கு மாற்றங்களை அறிவித்ததுடன் அவை வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பண வீதத்தில் உடனடித் தாக்கத்தைக் கொண்டிருக்கும். வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பண வீத மாற்றங்கள் குறுகிய காலப்பகுதியினுள் குறுகிய காலப் பணச் சந்தை வீதங்களுக்கும் (திறைசேரி உண்டியல் வீதங்கள் போன்ற) அத்துடன் ஏனைய குறுகிய கால வட்டி வீதங்களுக்கும் ஊடுகடத்தப்படுகின்றன. அதன்பின்னராக, அத்தகைய மாற்றங்கள் நிதியியல் நிறுவனங்களில் கடன்வழங்கல் மற்றும் வைப்பு வீதங்கள் உட்பட பொருளாதாரத்தில் காணப்படுகின்ற அனைத்து நடுத்தர மற்றும் நீண்ட கால வட்டி வீதங்களுக்கு ஊடுகடத்தப்படுகின்றன.

இந்நோக்கத்திற்காக மத்திய வங்கி திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடாத்துகின்றது. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் என்பது கொள்கை வட்டிவீத வீச்சினுள் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண விகிதத்தினைப் பேணுவதற்கு மத்திய வங்கியினால் சந்தைக்கு திரவத் தன்மையினை உள்ளெடுப்பதற்கு அல்லது ஈர்ப்பதற்கு பிணையங்களை வாங்குவதையும் விற்பதையும் குறிக்கின்றது. எனவே, திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், குறுகிய கால வட்டி வீதங்களுக்குச் செல்வாக்குச் செலுத்தும் பொருட்டு உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மையினை முகாமை செய்வதற்கு அரசாங்கப் பிணையங்களைப் பயன்படுத்தி மத்திய வங்கியினால் நடாத்தப்படும் முக்கிய சந்தை அடிப்படையில் அமைந்த நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளாகும். இதன் பயனாக நீண்ட கால வீதங்களும் ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைக்கும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

நாணயச் சபையினால் எடுக்கப்படும் நாணயக் கொள்கைத் தீர்மானங்களை நாளாந்த நாணயத் தொழிற்பாடுகளாக மாற்றுவதற்குப் பொறுப்பாகவுள்ள சந்தைத் தொழிற்பாடுகள் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மத்திய வங்கி நடாத்துகின்றது. மதிப்பிடப்பட்ட திரவத்தன்மை எதிர்வுகூறல், விரும்பப்படும் தொழிற்பாட்டு இலக்கு மட்டம், பங்கேற்கும் நிறுவனங்களுக்குடையில் திரவத்தன்மைப் பரம்பல் மற்றும் பொருத்தமான சந்தை சமிக்ஞைகளை வடிவமைப்பதற்கான தேவை போன்ற பல்வேறு காரணிகளைக் கருத்திற்கொள்வதன் மூலம் நிலவுகின்ற நாணயக் கொள்கை நிலைக்கு அமைவாக நாளாந்த தொழிற்பாட்டு நடவடிக்கை பற்றி சந்தைத் தொழிற்பாடுகள் குழு தீர்மானங்களை மேற்கொள்கின்றன.

உதாரணமாக மத்திய வங்கியானது வங்கித் தொழில் முறைமையில் மிகையானப் பணத் தொகையினை (திரவத்தன்மை மிகை) அவதானிக்குமாயின் அது வட்டி வீதங்களில் கீழ்நோக்கிய சார்பினை முன்னெடுக்கக்கூடும் என்பதால் மிகையானவற்றை ஈர்த்துக் கொள்வதை கருத்திற்கொள்ளலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் மத்திய வங்கியானது விற்பனை மற்றும் மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் அரசாங்கப் பிணையங்களை விற்பனை செய்வதன் கீழ் முயற்சிக்கின்றது. இது வழமையாக றெப்போக் கொடுக்கல்வாங்கல்கள் என அழைக்கப்படுகின்றது. இதனூடாக உரிமம்பெற்ற வங்கிகளிலிருந்து திரவத்தன்மை ஈர்க்கப்படுகின்றது. சந்தையில் திரவத்தன்மைப் பற்றாக்குறையொன்று காணப்படுகின்ற போது மத்திய வங்கியானது நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்த கொடுக்கல்வாங்கல்களைப் பயன்படுத்தி அரசாங்கப் பிணையங்களை கொள்வனவு செய்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு பணத்தினை வழங்குகின்றது (திரவத்தன்மை உட்செலுத்தல்). மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் முதிர்ச்சியில், காசுப்பாய்ச்சல்களும் பிணையங்களும் மீள்திருத்தப்படுகின்றன. (வரைபடம் 07ஐ பார்க்கவும்)


வரைபடம் 7: மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் (Repo)




*குறிப்பு: நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கை செயன்முறை பின்வருமாறு முதல் பிரிவு - மத்திய வங்கி, இணங்கிய காலத்திற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து அரசாங்கப் பிணையங்களைக் கொள்வனவு செய்கின்றது (மத்திய வங்கியினால் திரவத்தன்மை உட்செலுத்தப்படுகின்றது. இரண்டாம் பிரிவு - முதிர்ச்சி உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் கடன்பெற்ற நிதியங்களை வட்டியுடன் சேர்த்து மத்திய வங்கிக்கு திருப்பி வழங்கி பிணையங்களைப் பெற்றுக்கொள்கின்றன.*

மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளை மத்திய வங்கியானது திரவத்தன்மை நிலைமைகளின் தன்மையினைச் சார்ந்து தற்காலிக அத்துடன்/ அல்லது நிரந்தர அடிப்படையில் உள்நாட்டுப் பணச் சந்தைக்கு திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கு அல்லது உட்செலுத்துவதற்கு திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் வேறுபட்ட வகையான ஏலங்களை நடாத்துகின்றது. தற்போது அனைத்து ஏலக் கொடுக்கல்வாங்கல்களும் பொதுவாக திறைசேரி உண்டியல்களினால் அல்லது திறைசேரி முறிகளினால் பிணைய உறுதியளிக்கப்படுகின்றது. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள், ஓரிரவு, குறுகிய கால மற்றும் நீண்டகால தளங்கள் ஊடாக தற்காலிக அடிப்படையில் திரவத்தன்மையினை சேர்ப்பதற்கு/ நீக்குவதற்கு பயன்படுத்துகின்றது. எனினும், விடாப்பிடியான திரவத்தன்மைப் பற்றாக்குறையொன்று/ மிகையொன்று காணப்படுகின்ற போது மத்திய வங்கியானது சந்தைத் திரவத்தன்மையில் நிரந்தரமாகத் தாக்கம் ஏற்படுத்தும்பொருட்டு உடனடி அரசாங்கப் பிணையங்கள் கொள்வனவுகளை, விற்பனைகளைப் பயன்படுத்துகின்றது. (வரைபடம் 08ஐ பார்க்கவும்)

வரைபடம் 8: திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினதும் துணைநில் வசதியினதும் சுருக்கம்



# துணைநில் வசதி

துணைநில் வசதியென்பது ஓரிரவு அல்லது பிணைய உறுதியளிக்கப்பட்ட அடிப்படையில் நிதியங்களைக் கடன்பெறுவதற்கு அல்லது ஓரிரவு அடிப்படையில் நிதியங்களை வைப்பிலிடுவதற்கு பங்கேற்கும் நிறுவனங்களை அனுமதிக்கின்ற தளமொன்றாகும். அதற்கமைய இவ்வசதிகள், உரிமம்பெற்ற வங்கிகள் அவற்றின் நாளாந்தத் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் இதனூடாக உள்நாட்டுப் பணச்சந்தை வட்டி வீதங்களைக் கட்டுப்படுத்துவதற்கும் உதவுகின்றன. மத்திய வங்கியானது ஒவ்வொரு தொழில் நாளன்றும் இரு வகையான ஓரிரவு துணைநில் வசதியினை வழங்குகின்றது : துணைநில் கடன் வழங்கல் வசதி மற்றும் துணைநில் வைப்பு வசதி.

துணைநில் கடன் வழங்கல் வசதியானது பணச் சந்தையிலிருந்து அல்லது மத்திய வங்கியினால் நடாத்தப்படுகின்ற ஏலங்களிலிருந்து நிறைவுசெய்யப்பட முடியாதுள்ள குறுகிய கால எதிர்பார்க்கப்பட்ட அல்லது எதிர்பார்க்கப்படாத திரவத்தன்மை தேவைப்பாடுகளை சமாளிப்பதற்கு பங்கேற்கும் நிறுவனங்களை இயலச்செய்கின்றது. துணைநில் வைப்பு வசதியானது மிகையான நிதியங்களை மிகையான அடிப்படையில் மத்திய வங்கியிடம் வைப்பிலிடுவதற்கு ஓரிரவு அடிப்படையில் பங்கேற்கின்ற நிறுவனங்களை இயலச்செய்கின்றது. துணைநில் கடன் வழங்கல் வசதி மீதான வட்டியும் (துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம்) துணைநில் வைப்பு வசதி மீதான வட்டியும் (துணைநில் வைப்பு வசதி வீதம்) வட்டியும் பணச் சந்தையில் ஓரிரவு வட்டி வீதத்திற்கான முறையே மேல் உச்சத்தினையும் கீழ் மட்டத்தினையும் வழங்குகின்றன. எஞ்சியிருக்கின்ற நிதியளித்தல் தேவைகளை நிறைவுசெய்வதற்கும் செயற்பாடற்றுக் காணப்படுகின்ற நிதியங்களை இயலச்செய்வதற்கும் பங்கேற்கும் நிதியங்களுக்கு இவ்வசதியானது ஆதரவளிக்கின்றமையால், துணைநில் வசதியின் முக்கிய குறிக்கோள் குறுகிய கால பணச் சந்தை வட்டி வீதங்களின் தளம்பலைக் குறைப்பதாகும். தற்பொழுது, துணைநில் வைப்பு வசதியானது பிணையமளிக்கப்படாத (உரிமம்பெற்ற வங்கிகளின் அத்தகைய வைப்புகளின் மீது மத்திய வங்கியினால் பிணையங்கள் எதுவும் வழங்கப்படுவதில்லை) அதேவேளை, துணைநில் கடன் வழங்கல் வசதியானது பிணைய உறுதியளிக்கப்பட்டதாகும் (நிதியங்களைப் பெற்றுக்கொள்ளும் போது உரிமம்பெற்ற வங்கிகள் அரசாங்கப் பிணையங்களை வாக்குறுதியளிக்கின்றன).

# நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் (SRR)

நியதி ஒதுக்குத் தேவைப்பாடென்பது திரவத்தன்மையினை நிரந்தரமான அடிப்படையிலும் பணப் பெருக்கியூடாக பொருளாதாரத்தில் பணத்தின் அளவையும் தாக்கம் செலுத்துவதற்குப் பயன்படுகின்ற கொள்கைச் சாதனமொன்றாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் நியதி ஒதுக்குத் தேவைப்பாடு என்பது நாணய விதிச் சட்டத்தின் 93ஆம் பிரிவிற்கமைவாக மத்திய வங்கியில் ஒதுக்குகளாகப் பேணுவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் தேவைப்படுத்தப்பட்டுள்ள ரூபா வைப்புப் பொறுப்புகளின் பங்கு என வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. தற்போது கேள்வி வைப்புகள், கால மற்றும் சேமிப்பு வைப்புகள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் ஏனைய வைப்புகள் உள்ளடங்கலாக சராசரி மொத்த வைப்புப் பொறுப்புகள் நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் கீழ் வேண்டப்பட்ட ஒதுக்குகளைக் கணிப்பதற்குக் கருத்திற்கொள்ளப்படுகின்றன. மத்திய வங்கியானது விடாப்பிடியான திரவத்தன்மைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிரதானமாக நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை பயன்படுத்துகின்றது. இது பண நிரம்பலிலும் பொருளாதாரத்தின் வட்டி வீதங்களிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை மாற்றுவதன் மூலம் தமது வாடிக்கையாளர்களுக்கு கடன்களை மேற்கொள்வதற்கு உள்நாட்டு வங்கிகள் பயன்படுத்தக்கூடிய நிதியங்களின் தொகைகளில் மத்திய வங்கி செல்வாக்குச் செலுத்துகின்றது. நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டை பேணுகின்ற செயன்முறையை முன்னெடுக்கையில், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், அவற்றின் வேண்டப்பட்ட ஒதுக்குகளின் பாகமொன்றாக நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் வடிவில் குறித்த சதவீதமொன்றினைப் பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன. இது கருமபீட பணச் சலுகை என அறியப்படுகின்றது.

அத்தகைய தொகை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் பேணப்படவேண்டிய வேண்டப்பட்ட ஒதுக்குகளிலிருந்து தோன்றுகின்ற நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டிலிருந்தான சலுகையொன்றாக கழிக்கப்படுவதற்கு அத்தகைய தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றின் சராசரி மொத்த ரூபா வைப்புப் பொறுப்பு ரூ.8,000 பில்லியனாகவிருக்குமெனில், நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 4 சதவீதமாகும். என்பதுடன், கருமபீட பணச்சலுகை ரூபா வைப்புப் பொறுப்பின் 1 சதவீதம் (அதாவது 80 பில்லியன்) குறித்த ஒதுக்குப் பேணுதல் காலப்பகுதியின் போது உரிமம்பெற்ற

**அட்டவணை 1: நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை கணித்தல்**

| கூறு | ஒதுக்குத் தேவைப்பாடுகள் (ரூ. பில்.) |
|---|---|
| 1. சராசரி மொத்த ஒதுக்குப் பொறுப்புக்கள் | 8,000 |
| 1.1 கேள்வி வைப்புகள் | 400 |
| 1.2 கால மற்றும் சேமிப்பு வைப்புக்கள் | 7,500 |
| 1.3 ஏனைய வைப்புகள் | 100 |
| 2. நியதி ஒதுக்குத் தேவைப்பாடு (நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டை ரூபா வைப்புப் பொறுப்பின் 4 சதவீதமாக ஊகித்தல்) | 320 |
| 3. கருமபீட பணச் சலுகை (ரூபா வைப்புப் பொறுப்பின் 1 சதவீதமென ஊகித்தல்) | 80 |
| 4. ஒதுக்குக் காலப்பகுதிக்கென மொத்த வேண்டப்பட்ட ஒதுக்குகள் | 240 |

வர்த்தக வங்கியினால் பேணப்படுவதற்கு வேண்டப்பட்ட மொத்த ஒதுக்குகள் ரூ.240 பில்லியனாகும். (அட்டவணை 01ஐ பார்க்கவும்). நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டினை அதிகரிப்பதன் மூலம் மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் கடன் வழங்குவதற்கு பயன்படுத்தக்கூடிய பணத்தொகையில் செல்வாக்குச் செலுத்துவதுடன் (பண நிரம்பலில் சுருக்கம்) பொருளாதாரத்தில் வட்டி வீதங்களின் (நிதியங்களின் செலவு) அதிகரிப்பொன்றைத் தோற்றுவிக்கின்றது. மாறாக நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டைக் குறைப்பதன் மூலம் மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகளுக்கு மேலதிக ஒதுக்குகளை வழங்கி அவற்றின் கொடுகடன் விரிவுபடுத்தலுக்கு அவற்றை இயலச்செய்து (பண நிரம்பலில் விரிவடைதல்) வட்டி வீதங்களில் குறைப்பொன்றினைத் தோற்றுவிக்கின்றது. மேலும், நியதி ஒதுக்குத் தேவைப்பாடானது நாளின்போது நிகழக்கூடிய ஏதேனும் எதிர்பாராத கொடுப்பனவுக் கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதை அது வசதிப்படுத்துவதனால் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான அரணாக செயற்படுகின்றது. இதற்கமைய, நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டின் கீழ் பேணப்படும் நிலுவைகளானது மத்திய வங்கியில் பேணப்படும் உரிமம்பெற்ற வங்கிகளின் நடைமுறைக் கணக்கின் தீர்ப்பனவு நிலுவைகளாகவும் குறிப்பிடப்படுகின்றன.

பொருளாதாரம் மீதான நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டில் ஏற்படும் மாற்றத்தின் தாக்கம் வரைபடம் 9இல் காட்டப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் பகுதியொன்றாக சில கைத்தொழில்கள் அல்லது துறைகள் என்பவற்றிற்கு வழங்கப்பட்ட கொடுகடன், கடன்வழங்கல் மீது விதிக்கப்படக்கூடிய அல்லது வாடிக்கையாளர் வைப்புக்களுக்கு வழங்கப்படக்கூடிய வட்டி வீதங்களில் உச்ச வரம்புகள் ஆகியவை மீதான வரையறைகளை மத்திய வங்கி பயன்படுத்த முடியும்.

பொருளாதார முகவர்களின் தீர்மானங்கள் எதிர்கால பொருளாதார அபிவிருத்திகளையும் அடிப்படையாகக் கொண்டு காணப்படுவதனால் மற்றுமொரு நாணயக் கொள்கைக் கருவியாக தெளிவானதும் நம்பிக்கையானதுமான தொடர்பூட்டல் மத்திய வங்கியால் பயன்படுத்தப்படுகின்றது. மத்திய வங்கி மூலம் சந்தைக்கு வழங்கப்படும் காத்திரமான தொடர்பூட்டல் மற்றும் முன்னோக்கிய வழிகாட்டல் என்பன குறிப்பாக அதிகளவான பொருளாதார நிச்சயமற்றதன்மை காலப்பகுதியில் மிகவும் இன்றியமையாதவையாக காணப்படுகின்றன.

மத்திய வங்கியின் குறிக்கோள்களை அடைய ஆதரவளிப்பதற்காக பங்கேற்கும் நிறுவனங்களுடன் தமது நடவடிக்கைகளுடன் இணங்கும் நோக்குடன் மத்திய வங்கி ஒழுக்க நெறிசார் இணக்கத்தை பயன்படுத்துகின்றது. இதற்கமைய, சந்தை நடத்தைகளும் எதிர்பார்க்கைகளும் மத்திய வங்கி கொள்கைப் பணிப்புரையுடன் தவறாக இணங்கி காணப்படுகின்ற வேளைகளில் விரும்பிய பாதையூடாக பங்கேற்கும் நிறுவனங்களை மத்திய வங்கி நெறிப்படுத்துகின்றது.

# ஏனைய கொள்கைச் சாதனங்கள்

பொருளாதாரத்தில் ஏற்படும் தேவைகளையும் சூழ்நிலையும் பொறுத்து, நாணயக் கொள்கை நடாத்துதலில் வங்கி வீதம், மீள்நிதியிடல் வீதம், வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள், பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகள் போன்ற ஏனைய சாதனங்களை மத்திய வங்கி பயன்படுத்துகின்றது.

நிதியியல் முறைமையால் முகங்கொடுக்கப்படும் முறைமை இடர்நேர்வை தீர்ப்பதற்கு பொதுவாக அறிமுகப்படுத்தப்படும் பேரண்ட முன்மதியுடைய சாதனங்களை மத்திய வங்கி பயன்படுத்துகின்றது. உதாரணமாக, வெளிநாட்டுத் துறை மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்காக இறக்குமதிகளை கட்டுப்படுத்தும் பொருட்டு இறக்குமதிகள் மீதான எல்லைத் தேவைப்பாடுகளை அறிமுகம்செய்தல் அத்துடன் எதிர்ச்சூழல் மூலதன தாங்கிருப்புக்கள், மூலதனக் காப்பு தாங்கிருப்புக்கள், வருமான விகிதங்களுக்கான படுகடன் தீர்ப்பனவு மீதான உச்சங்கள் போன்ற வழிமுறைகளை அறிமுகப்படுத்துதல் என்பவற்றை நிதியியல் முறைமையிலும் பொருளாதாரத்திலும் ஏற்படும் உறுதியற்ற நிலைமைகளை தீர்ப்பதற்கு பயன்படுத்த முடியும்.

மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளையும் நாணயக்கொள்கையை நடாத்துவதில் பயன்படுத்துகின்றது. உதாரணமாக, மத்திய வங்கியானது எதிர்கால திகதியில் அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை விற்றல் கொள்வனவு என்பவற்றை பொறுப்பேற்பதுடன் வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு/ விற்பனை மேற்கொள்கின்ற வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர உடன்படிக்கையை மேற்கொள்ளலாம். இத்தகைய தொழிற்பாடுகள் திரவத்தன்மையை பாதிக்கின்றன.

இதற்கு மேலதிகமாக, அதிவிசேட சூழ்நிலைகளில் பொருளாதாரத்தை ஆதரவளிப்பதற்கு, சலுகை வீதங்களில் மீள்நிதியிடல் வசதிகளை தெரிவுசெய்யப்பட்ட துறைகளுக்கு மத்திய வங்கி வழங்க முடியும். பொருளாதாரத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஆற்றல்வாய்ந்த துறைகளை வலுப்படுத்துவதற்கு அத்தகைய திரவத்தன்மை உதவக்கூடும்.

நாணயத் தொழிற்பாடுகளூடாக மாத்திரமன்றி தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளில் அவசர திரவத்தன்மை உதவியூடாகவும் வங்கிகள் மத்திய வங்கி கொடுகடனிலிருந்து நிதியங்களை பெற்றுக் கொள்ள முடியும். அதற்கமைய சந்தை மூலங்களினால் நிறைவுசெய்யப்பட முடியாதவையாகவும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு உடனடி அச்சத்தை ஏற்படுத்துபவையுமாகவும் கடுமையான திரவத்தன்மை கடுமையானத் திரவத்தன்மை இறுக்கம் காணப்படுமாயின் தமது திரவத்தன்மை தேவைப்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு நாணயச் சபையால் ஏற்றுக்கொள்ளத்தக்க பல்வேறு வகையான பிணைய உறுதிகளைப் பயன்படுத்தி இவ்வசதியின் கீழ் நிதியங்களைக் கடன்பெறுவதற்கு தகைமை பெறுகின்றன. வழமையாக வங்கி வீதம் ஒப்பீட்டளவில் உயர்வான வட்டி வீதமாக காணப்படுகின்றது.

### வரைபடம் 9: நியதி ஒதுக்கு வீதத்தின் கீழ் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்

**வணிகங்கள்**



வைப்புகள்
ரூ.10 பில்.

**வீட்டுத்துறை**



வைப்புகள்
ரூ.90 பில்.

ஏபிசி வங்கியில் மொத்த வைப்புகள் (ரூ.100 மில்.)

நி.ஒ.தே. 4% (ரூ.4 பில்.)*

மத்திய வங்கி நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 4% இலிருந்து 2% இற்கு குறைக்குமாயின்

மத்திய வங்கியில் ஒதுக்குக் கணக்கில் ஏபிசி வங்கி ரூ.2 பில்லியனை பேணுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குவதற்கு ரூ.98 பில்லியனை பயன்படுத்துகின்றது (நிரந்தரமாக உட்செலுத்தப்பட்ட திரவத்தன்மை)

- வட்டி வீதங்கள் வீழ்ச்சி
- கொடுகடன் வளர்ச்சி துரிதப்படுகின்றது

மத்திய வங்கி நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 4%இலிருந்து 5% இற்கு அதிகரிக்குமாயின்

மத்திய வங்கியில் ஒதுக்குக் கணக்கில் ஏபிசி வங்கி ரூ.5 பில்லியனை பேணுவதுடன் வாடிக்கையாளர்களுக்கு கடன் வழங்குவதற்கு ரூ.95 பில்லியனை பயன்படுகிறது (நிரந்தரமாக ஈர்க்கப்பட்ட திரவத்தன்மை)

- வட்டி வீதங்கள் அதிகரிப்பு
- கொடுகடன் வளர்ச்சி வீழ்ச்சியுறுகின்றது



மத்திய வங்கி

பொருளாதார நடவடிக்கை மற்றும் விலை மட்டம் மீதான தாக்கம்

* கருமபீட பணச் சலுகை பூஜ்ஜியம் என அனுமானிக்குக

# பாகம் III: நாணயக் கொள்கை ஊடுகடத்தல் பொறிமுறை


நாணயக் கொள்கை ஊடுகடத்தல் பொறிமுறையானது மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகளில் காணப்படும் மாற்றங்கள் விலை உறுதிப்பாடு குறிக்கோளினை அடைவதற்கு பொருளாதார நடவடிக்கைக்கு எவ்வாறு சென்றடைகின்றது என்பதனை விவரிக்கின்றது. இது பொதுவாக கால வரையறை செய்தலில் நிச்சயமின்மை பற்றிய பாரிய அளவொன்றினையும் பொருளாதாரத்தின் மீதான தாக்கத்தின் அளவையும் ஈடுபடுத்துகின்ற இரு படிமுறை செயன்முறையொன்றாவதால் கடினமான செயன்முறையாகும். ஊடுகடத்தலின் உண்மையான தொடர்பும் காலமும் குறிப்பாக நீண்ட கால வட்டி வீதங்களுக்கு தெளிவற்றுக் காணப்படுகின்றன. எனவே, நாணய பொருளாதார இலக்கியத்தில் இத்தகைய ஊடுகடத்தல் கறுப்புப் பெட்டியொன்றாக கருதப்படுகின்றது.

ஊடுகடத்தலின் முதலாவது படிமுறை, கொள்கை வட்டி வீதங்களுக்கான மாற்றங்கள் வட்டி வீத ஊடுகடத்தல் எனப் பரவலாக அறியப்படுகின்ற பொருளாதாரத்தின் ஏனைய வட்டி வீதங்களுக்கு (குறுகிய கால மற்றும் நீண்ட கால வட்டி வீதங்கள் இரண்டும்) எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை விவரிக்கின்றது. ஊடுகடத்தலின் இரண்டாம் படிமுறையானது வட்டி வீதங்களுக்கான மாற்றங்கள் பொருளாதார நடவடிக்கையிலும் பண வீக்கத்திலும் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை விவரிக்கின்றது.


வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பண வீக்கமானது வட்டி வீதம் ஊடுகடத்தப்படுகின்ற முதலாவது சுற்றாகும் என்பதுடன் பொதுவாக விளைவு வளையி எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றமையால், பொருளாதாரத்தின் ஏனைய வட்டி வீதங்கள் மீது வலிமையான தாக்கத்தினைக் கொண்டுள்ளது. பொதுவாக கொள்கை வீத மாற்றங்கள், வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பண வீதத்தில் திடீர் சீர்ப்படுத்தலைத் தோற்றுவிக்கின்றன. இதனால், கொள்கை வட்டி வீதங்களுக்கு மத்தியில் மாற்றங்களை அறிவித்ததுடன் அழைப்புப் பண வீதத்தின் மீது அத்தகைய மாற்றங்கள் உடனடி விளைவொன்றினைக் கொண்டிருக்கும். பின்னர் அத்தகைய மாற்றங்கள் நிதியியல் நிறுவனங்களின் கடன் வழங்கல் மற்றும் வைப்பு வீதங்கள் உள்ளடங்கலாக குறுகிய மற்றும் நீண்ட கால வட்டி வீதங்களுக்கு ஊடுகடத்தப்படுகின்றன. எவ்வாறாயினும், சந்தைப் போட்டி அதேபோன்று முதிர்ச்சி மற்றும் வேறுபட்ட சந்தைகளில் அத்துடன் உற்பத்திகளில் ஈடுபடுகின்ற இடர்நேர்வு போன்ற வேறு காரணிகள் குறுகிய மற்றும் நீண்ட கால வட்டி வீத சீராக்கத்தின் கால வரையறை மற்றும் அளவு என்பவற்றைப் பாதிக்கின்றன.

நாணயக் கொள்கை ஊடுகடத்தலின் இரண்டாவது படிமுறையின் மத்திய வங்கியின் தீர்மானங்கள் பொருளாதார முகவர்களின் செலவிடுதல் மற்றும் முதலீட்டுத் தீர்மானங்களைப் பாதிக்கின்றன. இதனூடாக பொருளாதாரத்தில் திரண்ட கேள்வி நிலைமைகளையும் அதனைத் தொடர்ந்துவரும் பணவீக்க வீதத்தையும் பாதிக்கின்றது. எனினும் வீட்டுத் துறையும் நிறுவனங்களும் அவற்றின் போக்கிற்கு சரிசெய்வதற்கு காலமெடுக்கக் கூடுவதால் கொள்கைத் தீர்மானங்களுக்கும் பொருளாதார நடவடிக்கை மீதும் பணவீக்கம் மீதுமான அவற்றின் தாக்கங்களுக்குமிடையில் காலதாமதமொன்று காணப்படுகின்றது.

நாணய ஊடுகடத்தல் இரண்டாம் படிமுறையின் எளிதுபடுத்தப்பட்ட பதிப்பு வரைபடம் 10இல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதற்கமைவான உதாரணமாக, மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களைக் குறைக்கின்றபோது (நாணயத் தளர்த்தல் என அறியப்படுகின்ற) தனிப்பட்டவர்கள் வங்கித்தொழில் முறைமையில் காணப்படும் குறைவான வட்டி வீதங்கள் காரணமாக சேமிப்பதை விடவும் நுகர்வை அதிகரிப்பர். அதற்கமைய குறைவான வட்டி வீதங்கள், செலவிடுதலை தூண்டுவதன் மூலம் பொருளாதாரத்தில் ஒட்டுமொத்த கேள்வியினை (கூட்டுக் கேள்வி) அதிகரிக்கின்றன. எனினும், உற்பத்தியாளர்கள் மிகையான கேள்வியினால் ஏற்பட்ட அதிகரித்த கேள்வியை நிறைவுசெய்வதற்கு அதிக பணியாளர்களையும் உபகரணங்களையும் பணிக்கமர்த்த வேண்டிய தேவை காணப்படுகின்றமையால் பொருட்களின் நிரம்பலை மாற்றுவதற்கு ஒப்பீட்டளவில் அதிக காலம் எடுத்துக்கொள்கின்றனர். இது விலைகள் மீது மேல்நோக்கிய தாக்கத்தினை ஏற்படுத்தி உயர்வான பணவீக்கத்திற்கு வழிவகுக்கின்றது. மறுகரத்தில் மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை அதிகரிக்கின்ற போது (நாணய இறுக்கமடையச் செய்தல் என அறியப்படுகின்ற) உயர்வான கடன் பெறுதல் செலவு காரணமாக கடன் பெறுதல் மீது குறைவான கவனம் செலுத்தப்படும். இதற்கமைய, உயர்வான வட்டி வீதங்கள் ஒட்டுமொத்த கேள்வியையும் குறைவடையும் போக்கிற்கு உள்ளாவதுடன் பொருளாதார நடவடிக்கையில் மெதுவடைவொன்றிற்கு வழிவகுத்து இறுதியில் பணவீக்கத்தில் வீழ்ச்சியைத் தோற்றுவிக்கின்றது. நாணயக் கொள்கை ஊடுகடத்தலின் முதலாவது படிமுறையை விட இரண்டாவது படிமுறை மிகவும் கடினமாக காணப்படுகின்றது. வரைபடம் 10 எடுத்துக்காட்டப்பட்டவாறு, கொள்கை வட்டி வீதங்களில் ஏற்படும் மாற்றங்களும் நாணயக் கொள்கை சாதனங்களின் தாக்கங்களும் சந்தை வட்டி வீதங்கள், கொடுகடன், சொத்து விலைகள், செலாவணி வீதங்கள் மற்றும் எதிர்பார்க்கைகள் போன்ற பல்வேறுபட்ட ஆனால் ஒன்றுகொன்று தொடர்பிலான வழிகளினூடாக பரந்தளவில் பொருளாதாரத்திற்கு பொதுவாக ஊடுகடத்தப்படுகின்றன. அதேவேளை செலாவணி வீத வழிகள் தேறிய இறக்குமதிகளை பாதிக்கின்றதுடன் ஏனைய வழிகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஏனைய கூறுகளை அதாவது நுகர்வையும் முதலீட்டையும் பிரதானமாகப் பாதிக்கின்றன.




வரைபடம் 10: நாணயக் கொள்கை ஊடுகடத்தும் பொறிமுறை




நாணயக் கொள்கை ஊடுகடத்தலானது பணவீக்க எதிர்பார்க்கைகள் மூலமும் பாதிக்கப்படுகின்றது. எதிர்காலப் பணவீக்கம் பற்றிய பொருளாதார முகவர்களின் எதிர்பார்க்கைகள் அவர்களின் தற்போதைய நடத்தையினைப் பாதிக்கின்றது. உதாரணமாக பொருளாதாரத்திலுள்ள பணியாளர்கள் பணவீக்கம் உயருமென எதிர்பார்ப்பார்களாயின் பணவீக்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்களுக்கமைய அவர்களது சம்பள அதிகரிப்புகளைக் கோரலாம். உயர்வான சம்பள வளர்ச்சி அதன் பின்னரான உயர்வான விலைகளுக்கு வழிவகுக்கும். பணவீக்க இலக்கொன்றினை வைத்திருப்பதன் மூலம் காத்திரமான தொடர்பூட்டல் ஊடாகவும் பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுவத்துவதற்கு மத்திய வங்கி முனைகின்றது. இது நிச்சயமின்மை குறைவடைதல் காரணமாக சேமிப்பு மற்றும் முதலீடு பற்றிய தீர்மானம் மேற்கொள்ளும் நியதிகளில் வீட்டுத் துறையினதும் வியாபாரங்களினதும் நம்பிக்கையினை இது அதிகரிக்கின்றது. நாணயக் கொள்கையின் வினைத்திறனும் வெற்றியும் மத்திய வங்கியின் நம்பகத்தன்மையிலும் சுயாதீனத்திலும் தங்கியுள்ளன.